ஆனந்தா
ஊடக உலகம்

# உள்ளே . . .


03 ஆசிரியரிடமிருந்து...

04 ஆய்வும் சுயஆய்வும் — தேட வைக்கும் தேவை — அருள்பணி. ஜெ. மரிய அந்தோனி


06 இம்மாதச் சிறப்பு — புத்தாண்டு 2026 அறிவியலின் பரிமாணம் — அருள்பணி. லூர்துராஜ்

16 நலவாழ்வு — கழுகு மரம் — அருள்சகோதரி. லடிஸ்கா ரோஸ்லின்

18 சிந்தனை பகுதி — குடியரசு எங்கே போனது? — திரு. ச. ஜெயராஜ்

24 குழந்தைகள் பாதுகாப்பு — குழந்தைகளை நல்வழிப்படுத்த பெற்றோர்களுக்கான ஆலோசனைகள் — அருள்சகோ. மெர்சி

27 மறைமாவட்டச் செய்திகள்





வெளியிடுபவர்

மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம் D.D.**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

ஆசிரியர்

அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
✆ 7558175669

ஆசிரியர் குழு

அருள்பணி. **S. செபஸ்தி**
அருள்பணி. முனைவர் **R. மரிய டெல்லஸ்**
அருள்பணி. முனைவர் **M.R. சேசு**
முனைவர் **ஸ்டீபன் மிக்கேல்ராஜ்**
திரு. **சோமசுந்தர பாரதி**

ஆலோசகர்கள் குழு

அருள்பணி. **A. சிங்கராயர்**
அருள்சகோ. **அகஸ்டின்**
திரு. **வெட்டிவயல் வளவன்**
திரு. **அலெக்ஸாண்டர்**
திரு. **வியாகுல சந்தியாகு**
திருமதி. **மேரிபாரதி**

அலுவலகப் பணியாளர்

சகோ. **V. திவ்வியநாதன்**
✆ 7598052629

அலுவலகம்

**ஆனந்த கங்கைத் தூது**
வியான்னி அருள்பணி மையம்
மதுரை சாலை, சிவகங்கை – 630 561

தொடர்புக்கு

மாதா டிவி : 7558175669
கங்கைத் தூது : 7558175669

மின்னஞ்சல் : anandacommunicationsvg@gmail.com

அலுவலக நேரம் : காலை 9.30 – மாலை 4.30 வரை


சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | – ₹ 150 |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் ) | – ₹ 1,500 |

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்பக்க அட்டை | – ₹ 6,000 |
| அட்டை உள்பக்கம் | – ₹ 5,000 |
| முழுபக்கம் | – ₹ 3,000 |
| அரைப்பக்கம் | – ₹ 1,500 |

உங்கள் மேலான படைப்புகள்
வந்துசேர வேண்டிய கடைசி நாள்
**12.01.2026**

பிப்ரவரி மாத தலைப்பு
**என் தவம் என் வேதம்**

இதழ் சந்தா / மாதா தொலைக்காட்சி நன்கொடையினை வங்கியில் செலுத்த :

| | | |
|---|---|---|
| Bank Name | : | Canara Bank, Sivagangai |
| Account Name | : | Communication Commission |
| A/c. No. | : | 5157101011835 |
| IFS Code | : | CNRB0005157 |

குறிப்பு : தங்கள் சந்தாவினை புதுப்பிப்பவர்கள் பெயர், சந்தா எண், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். வங்கியில் செலுத்துபவர்கள் விபரங்களை SMS செய்யவும்.

# ஆயரின் பணித்திட்டம்



| | | |
|---|---|---|
| 01 | | ஆயர் இல்லம்: புத்தாண்டு கொண்டாட்டம் |
| 02 | | இடைக்காட்டூர்: மாதத்தின் முதல் வெள்ளி திருப்பலி |
| 07 - 08 | | வியான்னி இல்லம்: மறைமாவட்ட குருக்கள் கூடுகை |
| 10 | | ஞானஒளிபுரம் : திருப்பலி |
| 11 | கா | கீழடி : தமிழர் பொங்கல் |
| | மா | கே.எம்.கோட்டை: வெள்ளி விழ திருப்பலி |
| 13 | | பார்த்திபனூர்: புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி வெள்ளிவிழா கொண்டாட்டம் |
| 16 | | வியான்னி இல்லம் : இளையோர் பொங்கல் |
| 17 | | ஆர்.எஸ். மங்கலம், சவேரியார்பட்டணம்: அர்ச்சிப்பு விழா |
| 18 | | வேலூர் மறைமாவட்டம்: ஆன்மீக மாநாடு |
| 21 - 22 | | சென்னை: TNBC/TNLBC கூட்டம் |
| 24 | | வியான்னி இல்லம்: கிறித்தவ அமைப்பு கூட்டம் |
| 25 | | பெங்களூர்: தூய ஆவியார் ஆலயம் திருவிழா திருப்பலி |
| 27 | | ஆயர் இல்லம் : ஆலோசகர் குழு கூட்டம் |
| 30 | | செக்காலை: திருமணத் திருப்பலி |
| 31 | | காளையார்கோவில்: திருவிழா திருப்பலி |

புதிய ஆண்டு என்பது
அனைவருக்கும் மகிழ்ச்சியும்
தொடக்கமும் தரும் ஒரு சிறப்பு நேரம்.
குழந்தைகளுக்கு தங்களது
திறமைகளை, படைப்பாற்றலை,
கற்பனையை, வெளிப்படுத்த
சிறந்த வாய்ப்பு.
புதிய பாதை, புதிய கனவு
என்று மனமாற வரவேற்போம்.

கல்வியே என் செல்வம்
நேற்றின் பாடம் - இன்றின் வழிகாட்டி
உண்மை பேசுவேன், அன்பை விதைப்பேன்,
புத்தகங்கள் என் நண்பர்கள்,
அறிவு என் ஒளி.
"சிறு முயற்சியே பெரும் வெற்றி"
என்று நம்பி, மகிழ்ச்சியுடன்
கவிதையாக புதிய ஆண்டை வரவேற்போம்.



# ஆனந்த கங்கை தூதுவிடமிருந்து...

"கொடியில் கிளைகள் இணைந்திருந்தால் அவை கோடியாய் பலன் தருமாம். இயேசுவில் நானும் இணைந்திருந்தால் என்றும் இல்லாத பேரின்பமாம்"

ஆனந்த கங்கை தூதுவின் இனிய இதயங்களே அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள். இறைவன் நமக்கு மீண்டும் தனது அன்பை இப்புதிய ஆண்டின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். இப்புதிய ஆண்டிலே நாம் எண்ணியவை எண்ணியபடியே நடக்க இறைவனை வேண்டிக் கொள்வோம்.

இனிய நெஞ்சங்களே இப்புதிய ஆண்டை நாம் எப்படி சந்திக்கின்றோம். நமக்குத் தெரிந்த ஒருவரை சந்திக்கின்ற பொழுது ஏற்படும் உணர்வை விட புதிய மனிதர்களை சந்திக்கும் பொழுது ஏற்படும் உணர்வு சற்று ஆச்சரியம் நிறைந்ததாக இருக்கும். இம்மாத இதழ் "சந்தித்த வேளை" என்னும் தலைப்பில் வெளிவருகிறது. இப்புதிய ஆண்டை சந்திக்கின்ற பொழுது, இப்புதிய ஆண்டில் இறைவனை சந்திக்கின்ற பொழுது, இப்புதிய ஆண்டில் உறவுகளை சந்திக்கின்ற பொழுது நமக்குள் எப்படிப்பட்ட எண்ணங்கள், உணர்வுகள் தோன்றும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க இம்மாத இதழ் அழைப்பு விடுக்கிறது.

இயேசுவை இடையர்கள் சந்தித்த பொழுது, இயேசுவை ஞானிகள் சந்தித்த பொழுது, இயேசுவை பேதுரு சந்தித்த பொழுது, இயேசுவை நிக்கதேம் சந்தித்த பொழுது, இயேசுவை சக்கேயு சந்தித்த பொழுது, இயேசுவை புனித பவுல் சந்தித்த பொழுது ஏற்பட்ட உணர்வு மகிழ்ச்சி மட்டுமே. இவர்கள் அனைவரும் இயேசுவை சந்திப்பதற்கு முன்பு இவர்கள் சந்தித்தது துன்பமும், துயரமும், கண்ணீரும், கவலையும், சோதனையும், வேதனையும் மட்டுமே...

நம்முடைய வாழ்வும் இப்படித்தான் இருந்திருக்கும். இயேசுவை சந்திப்பதற்கு முன்பு நாமும் பலவாறு துன்பங்களை சந்தித்திருப்போம். இயேசுவை சந்தித்த மனிதர்களைப் போன்று நாமும் இறைவனை சந்தித்து மகிழ்ச்சியை பரிசாக பெறுவோம்.

இப்புதிய ஆண்டில் நாம் அதிகமாக யாரை, எதை சந்திக்கப் போகின்றோம்?

கெட்ட எண்ணங்களையா? கெட்ட வார்த்தைகளையா? கெட்ட செயல்பாடுகளையா? அல்லது இவற்றைத் தூண்டும் அறிவியல் சாதனங்களையா? பொழுது போக்குகளையா? சிந்திப்போம்?

இப்புதிய ஆண்டில் புதிய நம்பிக்கையோடு புதிய எண்ணங்களோடு மனிதரில் வாழும் இறைவனை, இறைவனில் வாழும் அன்பினை சந்திப்போம். வாழ்வு தித்திக்கட்டும்.

**அனைவருக்கும் புத்தாண்டு *மற்றும்* பொங்கல் நல்வாழ்த்துகள்!**

இயேசுவின் அன்பில்
அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
செயலர், ஊடகப் பணிக்குழு,
சிவகங்கை மறைமாவட்டம்.

# புதிய பாதை – புதிய சிந்தனை

அருட்பணி. **சந்தியா பிலோமோன்**
திருச்சிலுவை சபை

காலங்கள் இடையறாது கடந்து செல்கின்றன. ஒரு ஆண்டின் முடிவில் இன்னொரு புதிய ஆண்டு பிறக்கிறது. நாள்காட்டியில் தேதிகள் மாறுகின்றன. வாழ்வின் பயணத்தில் நாம் இன்னொரு படி முன்னேறுகிறோம் என்று எண்ணுகிறோம். ஆனால் உண்மையில் நாம் பயணிப்பது புதிய பாதையிலா, அல்லது ஏற்கனவே நடந்துபோன, பழகிப்போன பழைய பாதையிலா என்ற கேள்வி நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய பாதை திறக்கப்படுகிறது. அந்தப் பாதை புதிய நம்பிக்கைகளையும், புதிய வாய்ப்புகளையும், புதிய தொடக்கங்களையும் நமக்கு அளிக்கிறது. இருந்தும் நாம் அந்த புதிய பாதையில் பயணிக்கத் தயங்குகிறோம். காரணம், கடந்த கால அனுபவங்கள் நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. பழைய தோல்விகள், பழைய காயங்கள், பழைய வலிகள், பழைய பயங்கள். இவை எல்லாம் நம்மைப் புதிய பாதையிலிருந்து விலக்கி, நமக்குப் பழகிய பழைய பாதையிலேயே கட்டிப்போடுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் நமக்குப் புதிய அனுபவங்களையும், புதிய சிந்தனைகளையும் தர முனைகிறது. வாழ்க்கை நம்மிடம் "புதியதாக யோசி, புதியதாக முயற்சி செய்" என்று அழைக்கிறது. ஆனால் நாம் என்ன செய்கிறோம்? அதே பழைய அனுபவங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறோம். அதே பழைய எண்ணங்களோடு வாழ்க்கையை மதிப்பீடு செய்கிறோம். ஒருமுறை தோல்வி அடைந்த இடத்தில் மீண்டும் முயற்சி செய்ய அஞ்சுகிறோம். ஒரு காலத்தில் காயப்படுத்திய மனிதர்களையும் நிகழ்வுகளையும் நினைத்து இன்றைய நாளையும் கனமாக மாற்றிக்கொள்கிறோம். பழைய அனுபவங்கள் நமக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்; ஆனால் அவை நம்மை சிறைபிடிக்கக் கூடாது. பழைய வலிகள் நம்மை விழிப்புணர்வுடன் வாழச் செய்ய வேண்டும்; ஆனால் அவை நம்முடைய எதிர்காலத்தை முடக்கக் கூடாது. கடந்த காலம் நமக்கு வழிகாட்டியாக இருக்கலாம்; ஆனால், அது நம்முடைய பயணத்தின் இறுதி திசையகாக இருக்கக் கூடாது.

இந்தப் புதிய ஆண்டு நம்மை ஒரு முக்கிய முடிவின் முன் நிறுத்துகிறது. "பழைய எண்ணங்களையும், பழைய அனுபவங்களையும், பழைய வலிகளையும் இங்கேயே விட்டு விடுவேனா?" என்ற கேள்வி நம்முள் எழ வேண்டும். புதிய பாதையில் பயணிக்க பழைய சுமைகளை இறக்கி வைக்கத் தயாராக இருக்க வேண்டும். மன்னிப்பில்லா மனம், பயத்தால் கட்டப்பட்ட சிந்தனை, தோல்வியின் நினைவால் உறைந்த இதயம் – இவைகளை விட்டுவிடாமல் புதிய பயணம் சாத்தியமில்லை.

புதிய ஆண்டு என்பது காலத்தின் மாற்றம் மட்டுமல்ல; அது சிந்தனையின் மாற்றத்திற்கான ஒரு அழைப்பு. ஒவ்வொரு நாளையும் புதிய நாளாக ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு அனுபவத்தையும் புதிய பார்வையுடன் சந்திக்க வேண்டும். புதிய எண்ணங்களோடு முயற்சிக்க வேண்டும்; புதிய அனுபவங்களோடு வளர வேண்டும்; புதிய நம்பிக்கையோடு முன்னேற வேண்டும்.

இந்த ஆண்டில் நாம் ஒவ்வொருவரும் புதிய பாதையில் பயணிக்கத் தீர்மானிப்போம். பழையவற்றை மறக்க முடியாவிட்டாலும், அவைகளால் கட்டுப்படாமல் வாழ கற்றுக்கொள்வோம். வாழ்க்கையை ஒரு பாரமாக அல்ல, ஒரு பரிசாக ஏற்றுக்கொள்வோம். அப்பொழுது நாம் உண்மையில் மகிழ்ச்சியின் பிள்ளைகளாக, நம்பிக்கையோடும் சுதந்திரத்தோடும் வாழமுடியும்.

# குடியரசு தினம்...

✍ செல்வன். **மாணிக்கம்,** செஞ்சை

அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவரோடும் குடியரசு தினம் என்ற தலைப்பில் சிந்திக்க அன்புடன் அழைக்கிறேன். * குடியரசு தினம் என்பது இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள். * குடியரசின் பொருள் ஒரு குடிமகனின் ஆட்சி இங்கு நடைபெற வேண்டும் என்பதன் பொருள் ஆகும். குடியரசு தினம் நமக்கு 4 செய்திகளைத் தருகிறது. * **அரசியலமைப்பின் முக்கியத்துவம்** : சட்டம் வாயிலாக அனைவருக்கும் உரிமை, சமத்துவம், நீதி வழங்கப்படுகிறது. * **சமத்துவம்** : மதம், சாதி, மொழி, பாலினம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் சமம். * **மக்களின் அதிகாரம்** : நாட்டின் ஆட்சி, மக்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளால் நடக்கிறது. ***தேசப்பற்று** : சட்டத்தை மதித்து நல்ல குடிமக்களாக நடக்க வேண்டும். தேசத்தை உண்மையாக மதித்து கொள்கைகளைக் காப்பாற்ற வேண்டும்.

* **இந்த செய்திகள் வாயிலாக தங்கள் சிந்தனைக்கு...**

மத உரிமை அனைவருக்கும் கொடுக்கப்படுகிறதா? (குறிப்பாக சிறுபான்மை யினருக்கு) நீதி அனைவருக்கும் சமமாக வழங்கப்படுகிறதா? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியின் பிரதிநிதிகள் ஒரு சட்டத்தை மொழிந்தும் நிறைவேற்ற முடியாத நிலை? சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். குடியரசு தினம் வெறும் கொடி ஏற்றி இனிப்பு வழங்குவது மட்டுமல்ல. எதற்காக நாம் இவ்விழாவைக் கொண்டாடுகிறோம் என்ற அர்த்தத்தை புரிந்துகொண்டு வாழ்வில் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். நாம் மேற்கண்ட கூற்றுகளில் அனைத்தையும், இயேசு தன் வாழ்நாளில் பின்பற்றி வாழ்ந்தார் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

இயேசு அனைவருக்காகவும் குரல் கொடுத்தார் மற்றும் தன்னையே பகிர்வாக அளித்தார். இயேசுவின் வாழ்வு நீதியையும் சமத்துவத்தையும், உரிமையையும் நிலைநாட்டியது. அன்பிற்குரியவர்களே குடியரசு தினம் சமத்துவம், நீதி, சுதந்திரம் இது போன்ற நல்ல பண்புகளை விதைத்து இருக்கிறது. ஆனால் நாம் நம் நாட்டில் இந்த தினத்தை கொண்டாடும் முன் சிந்திக்க வேண்டும். சுதந்திரம் முழுமையாக அளிக்கப்படுகிறதா? அதில் முக்கியமாக மதச் சுதந்திரம் நமக்குத் தரப்படுகிறதா? என்று சிந்திப்போம்.

இந்திய நாடு மதச்சார்பற்ற நாடு என வாய் மொழியாகச் சொல்லும் நாம் என்று நம் மனதில் ஏற்றுக்கொண்டு செயல்படப் போகிறோம். இன்று மதச் சுதந்திரம் கேள்விக்குறி ஆக்கப்பட்டு வருகிறது. 1) திருப்பரங்குன்றம் விவகாரம், 2) கிறிஸ்து பிறப்பு பெருவிழா. அன்று சில இடங்களில் நடந்த வன்முறை எல்லாம் உண்மையான மதசுதந்திரமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்த நாட்டில் பிறந்த எல்லாருக்கும் கருத்துச்சொல்ல உரிமை உண்டு. ஆனால் இன்று கருத்து சொன்னால் நம் நிலை என்னவாகும் என்ற அளவிற்கு நமது கருத்து சுதந்திரம் உடைக்கப்பட்டு வருகிறது. இயேசுவின் வருகை நமக்கு மகிழ்ச்சி கொடுக்கிறது என்று சொல்லும் நாம் இயேசுவின் பிறப்பு விழா அன்று நம் சகோதர சகோதரிகள் படும் துன்பத்துக்கு நம் பதில் என்ன? மவுனம் என்றால் இயேசு அமைதியாக இருந்தால் இன்று நம்மை மீட்டு இருக்க முடியுமா? என்று சிந்திப்போம். நாம் சில நேரங்களில் சொல்லாக குடியரசு தினம் பேசுகிறோம். ஆனால் நிஜ வாழ்வில் குடியரசு தினம் மதிப்புகள் தோற்றுப்போகி உள்ளன. ஜனநாயக நாட்டில் வாழும் உரிமை, பேசும் உரிமை, கருத்துச் சொல்லும் உரிமை, அனைவருக்கும் உண்டு என்று சட்டம் சொல்லும்போது நாம் ஏன் அமைதிக்கு செல்கிறோம், சிந்திப்போம்.

இயேசு கிறிஸ்து சொல்லும் இரண்டு வார்த்தை மட்டும் சொல்லிக்கொண்டு நிறைவு செய்கிறேன். நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். இந்த வாக்கியம் கடவுள் நம்மீது அளவற்ற நம்பிக்கையையும் அருளையும் பொழிந்து உள்ளார். இந்த உலகம் முடிவு வரைக்கும் நான் உன்னோடு இருந்து உனக்கு ஆசி வழங்குவேன் என்று சொல்லி மறுக்கப்பட்ட நீதியை நான் நிலைநாட்டுவேன் என்று ஆற்றுப்படுத்துகிறார் நம் ஆண்டவர். இந்த இறைவனை போற்றக்கூடிய நாம் குடியரசு தினம் மதிப்பீடுகளை அறிந்து அதன்படிப நடந்து, வாழ்வில் சமூகத்தில் எதிர்நடக்கும் நிகழ்வுகளை இறைவன் முன் ஒப்படைத்துக் கொண்டு செயல்படும் போது இந்த குடியரசு தினம் நிச்சயம் இறைவனுக்கும் இந்த நாட்டிற்கும் நல்ல அர்த்தமுள்ள வகையில் இந்த குடியரசு தினம் அமையும் என்பதில் மிகையல்ல. அனைவருக்கும் குடியரசு தின நல்வாழ்த்துகள்.

நீமொ 13:23 **தரிசு நிலம் ஏழைக்கு ஓரளவு உணவுதரும்; ஆனால் நியாயம் கிடைக்காத இடத்தில் அதுவும் பறிபோகும்.**

# குடியரசு எங்கே போனது?

ச. ஜெயராஜ்
உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் (ஓய்வு), சாலைக்கிராமம்

சுதந்திர இந்தியா குடியரசாக மாறிய 76-ம் தினத்தைக் கொண்டாட இருக்கிறோம். சனநாயகம், மக்களாட்சி, குடியாட்சி என்ற சொற்களுக்கு மக்களாய், மக்களுக்காக ஆளப்படுகின்ற ஆட்சியை மக்களாட்சி என்று அழைக்கிறோம்.

இந்தியா ஒரு இறையாண்மை கொண்ட சனநாயகக் குடியரசாக மாறியதையும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததையும் நினைவுகூற ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகின்ற தேசிய விழா குடியரசு தினமாகும். இவ்விழா நாட்டின் சுதந்திரம், நீதி, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகிய விழுமியங்களை வலியுறுத்துகிறது.

நாட்டின் விடுதலைக்குப் பிறகு இந்தியாவை ஆள ஒரு முறையான சட்டத்தொகுப்பு தேவைப்பட்டது. அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான அரசியலமைப்புச் சபை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்தது. இந்த அரசியலமைப்புச் சட்டம்தான் நாட்டை ஆளும் முதன்மை ஆவணமாக மாறியது. 1950 சனவரி 26-ம் நாள் அன்றுதான் இந்தியா ஒரு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து இந்த அரசியலமைப்புச் சட்டம் இந்தியக் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளையும், கடமைகளையும் வழங்கி, இந்தியாவின் பன்முகத்தன்மையைக் கொண்டாடும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டையும், தேச பக்தியையும் வளர்த்து ஒரு வலுவான சனநாயக அமைப்பிற்கு அடித்தளமிட்டது.

ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் நாட்டுமக்கள் முழுமையான குடியாட்சியை, உண்மையான மக்களாட்சியை அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் பதில் வருகிறது. நாட்டில் நடக்கின்ற அவலங்களையும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளையும் கண்கூடாகக் காணுகின்றபொழுது நாம் உண்மையான குடியரசு நாட்டில் வாழ்கின்றோமா? என்ற சந்தேகம் எண்ணத்தில் உதிக்கிறது. அப்படியென்றால் ஏன் இந்தக் குடியாட்சி...? எதற்கு இந்த குடியரசு தினக் கொண்டாட்டம்? என்று எண்ணத் தோன்றுகிறது. காரணம் ஆட்சியாளர்களின் அடாவடி அவ்வாறு உள்ளது. இதோ ஒரு சில உதாரணங்கள் மட்டும் உங்கள் பார்வைக்கு.

தேசபிதா மகாத்மா காந்தியடிகளை வரலாற்றிலிருந்து மெல்ல மெல்ல மறைக்கவேண்டும் என்பதற்காகவும், மக்கள் மனத்திலிருந்து மறக்கடிக்க வேண்டும் என்பதற்காகவும் அவரின் பெயரிலுள்ள பல திட்டங்களைப் பெயர்மாற்றம் செய்து அதே திட்டத்தை புதிய திட்டமாகச் சட்டங்கள் இயற்றி நடைமுறைப்படுத்தும்பொழுது...?

அரசியலமைப்பு தந்த சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் பட்டியலினத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக ஆட்சியாளர்கள் அவருடைய பெயரை வரலாற்றிலிருந்து மறைக்க முயற்சித்தும், "அம்பேத்கரின் பெயரை ஏன் உச்சரிக்க வேண்டும்?" என்று அமைச்சர் ஒருவரே மக்களவையில் கர்ச்சிக்கும்பொழுது...?

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த சகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் பாடலைப் புறந்தள்ளிவிட்டு, சனநாயக நாட்டில் வாழும் அனைவருக்கும் உடை, உணவு, வீடு போன்ற அடிப்படை உரிமைகளை மக்களுக்கு வழங்காமல் ஏழைகளைப் புறக்கணித்து, பணம்படைத்தவர்களுக்கான அரசாக மாறும்பொழுது...?

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்..." என்ற வள்ளுவரின் வாக்கினை மறந்து, நாட்டிலுள்ள மக்களனைவரும் சமம் என்று நினையாமல் சாதியால், மதத்தால், தொழிலால் பிரித்து மக்களிடத்தில் வேற்றுமை உணர்வை வெறுப்பூட்டி வளர்த்து ஆட்சியாளர்களே கலவரத்தைத் தூண்டும்பொழுது...?

மணிப்பூர் மாநிலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டு, ஆட்சியாளர்களே கலவரத்தை ஏற்படுத்தி கிறித்தவ ஆலயங்களும், கிறித்தவர்களின் வீடுகளும் தீக்கிரையாகவும், கிறித்தவ மக்கள் கொலை செய்யப்பட்டும், கிறித்தவப் பெண்களை பாலியல் வன்கொடுமைப்படுத்தியும், மணிப்பூர் மாநிலமே தீப்பற்றி எரியும்பொழுது ஒன்றிய ஆட்சியாளர்கள் அங்கு செல்லாமல் மக்களின் வரிப்பணத்தில்

உலகத்தை வலம்வந்து கொண்டிருக்கும்பொழுது, மாநில ஆட்சியாளர்கள் இந்துக்களைத் தூண்டிவிட்டு கிறித்தவப் பழங்குடியினர் அழிவில் ஆனந்தம் அடையும்பொழுது...?

சார்க்கண்ட் மாநிலத்தில் வாழும் பழங்குடியின மக்களின் நிலம், காடு மற்றும் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடிய, சேசுசபைக் குருவாகப் பணியாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை ஸ்டான் சுவாமி, 'மனித உரிமைப் போராளி', 'சமூக நீதிப் போராளி' என்று எல்லோராலும் போற்றப்பட்ட அவர்மீது பொய்க்குற்றம் சுமத்தி, அவரது கணினியில் சட்ட விரோதமாக நுழைந்து தவறான சான்றுகளைப் பதிவு செய்து அதனடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையிலடைத்து, குடிப்பதற்குக்கூட தண்ணீர் கொடுக்காமல் சித்திரவதை செய்து, அவரின் இறப்புக்கு ஆட்சியாளர்களே காரணமாகத் திகழ்ந்தபொழுது...?

ஒடிசாவில் ஆஸ்திரேலியப் பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின் என்பார் குடும்பத்துடன் தங்கி, கிராம மக்களுக்கும், தொழுநோயாளர்களுக்கும் தொண்டாற்றி வந்தபொழுது, இவர் அப்பகுதி மக்களை மதமாற்றம் செய்துவருகிறார் என்பதாகப் பொய்க்குற்றம் சுமத்தி தாராசிங் என்பவர் தலைமையில் இந்துக்கள் பலர் ஒன்றுசேர்ந்து, பாதிரியாரையும் அவரது இரண்டு மகன்களையும், சேவை செய்த இடத்தில் தன்னுடைய ஜீப்பில் தூங்கிக்கொண்டிருந்த பொழுது, ஜீப்போடு தீ வைத்துக் கொளுத்திய அவலம் அரங்கேறியபொழுது, இந்நிகழ்ச்சியை ஆட்சியாளர்களே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது...?

மும்பையைப் பூர்வீகமாகக் கொண்ட ஜெமிமா ரோட்ரிக்ஸ் என்ற வீராங்கனை ஒரு கிறித்தவர் என்பதற்காக மகளிர் சர்வதேசப் போட்டிகளில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டபோதும் ஜெமிமாவின் தொடர் முயற்சியால் உலகக் கோப்பை 2025-ல் போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்து, இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் 127 ஓட்டங்கள் எடுத்து வெற்றியடைந்து, இந்திய அணி உலகக்கோப்பை சாம்பியன் பட்டம் வென்றதற்கு வித்திட்ட ஜெமிமாவை மதம் அடிப்படையில் கிரிக்கெட் போட்டிகளில் நிராகரிக்கும்பொழுது...?

இசுலாமியர்களின் மசூதிகளையும், தர்காக்களையும் கட்டம் கட்டி அந்த இடங்கள் இந்துக்களுக்குச் சொந்தமானது என்று வம்பிழுத்து, வழக்குத் தொடுத்து ஒன்றிய அரசுக்கும், இந்து சித்தாந்தங்களுக்கும் ஆதரவான நீதிபதிகளிடம் கொண்டுசென்று நீதிக்குப் புறம்பாக வெற்றிபெற்று சமூக அமைதியைக் கெடுக்கும் அளவுக்குக் கலவரம் செய்து பொதுச்சொத்துக்களை நாசம் செய்யும்பொழுது...?

பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்து, நிர்வாணப்படுத்தி பொதுவெளியில் அழைத்துச்சென்று கற்பைச் சூறையாடும்பொழுது...?

"இந்தியா அதாவது பாரத், மாநிலங்களின் ஒன்றியம்" (India that is Bharat, shall be a union of states) என்பதை மறந்து, ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே நாடு ஒரே ரேசன், ஒரே நாடு ஒரே வரி, ஒரே நாடு ஒரே கல்வி, ஒரே நாடு ஒரே மொழி என்று படிப்படியாக மாற்றி ஒரே நாடு ஒரே அதிபர் என்ற நிலைக்கு நாட்டை நகர்த்திச் செல்கின்றபொழுது...?

தேசியக் கல்விக் கொள்கை என்ற போர்வையில் மூன்று, ஐந்து மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் பொதுத்தேர்வு நடத்தி ஏழை மாணவர்களை, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களை உயர்கல்விப் பயிலவிடாமல் இடைநிற்றலை ஊக்குவித்தும், கல்வியில் கட்டாயப்பாடமாக, மூன்றாவது மொழியாக இந்தியைத் திணிக்க முயற்சிசெய்து தாய்மொழிக் கல்வியைத் தடுக்கின்றபொழுது...?

ஒன்றிய அரசுக்கு எதிரான மாநிலங்களின் கல்வி நிதியைப் பகிர்ந்தளிக்காமலும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு வரிப்பகிர்வில் பாரபட்சம் காட்டி அம்மாநிலங்களை மக்கள் நலத்திட்ட உதவிகளைச் செய்யவிடாமல் தடுக்க முயற்சிக்கும்பொழுது...?

**முன்னோர்கள் வகுத்த**
**அரசமைப்புச் சட்டம் எங்கே போனது...?**
**மூத்தோர்கள் கண்ட**
**சனநாயகம் எங்கே போனது...?**
**முன்னோர்கள் கண்ட**
**குடியரசு எங்கே போனது...?**

# புத்தாண்டு 2026 – அறிவியலின் பரிமாணம்

✍ அருட்பணி. **செ. லூர்து ராஜ்**
பங்குத்தந்தை, திரு இருதயங்களின் ஆலயம், சருகணி

புத்தாண்டு புதுமை பிறக்கட்டும்!
புத்துணர்ச்சி பொங்கட்டும்!
பழமைகள் வாழட்டும்!
பக்குவத்தை வளர்க்கட்டும்!
சிந்தனைகள் மலரட்டும்!
சிறந்தவைகள் தொடரட்டும்!
செயல்பாடுகள் நடக்கட்டும்!
செம்மையாய் மாறட்டும்!
புத்தாண்டில் கிடைக்கட்டும்!
புத்துயிர் பெற்று சிறக்கட்டும்!

2026ஆம் ஆண்டு, நாம் அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் நுண்ணணர்வு, நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENT - AI) மூலம் புதிய பரிமாணத்தை அடைவதை எதிர்பார்க்கின்றோம். இதன் அடிப்படையில் உலகம் முழுவதும் பெரும் மாற்றங்கள் உருவாகின்றன. இந்த ஆண்டின் புதிய பெயர் – "அறிவியலின் பரிமாணம்" என்பதன் மூலம் அறிவியலின் முன்மாதிரி மாற்றங்களை மற்றும் நுண்ணறிவின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம்.

## I. நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE) எதிர்காலத்தின் வழி

அறிவியலின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றான நுண்ணறிவு (AI) கருதப்படுகிறது. அதன் மூலமாக இயந்திரங்கள் மனிதனின் அறிவு, கற்றல், தீர்வு காணல் மற்றும் சிந்தனையை பிரதிபலிக்கும் நிலையில் வருகின்றன. இது இன்று பல துறைகளிலும் பல புதிய வசதிகளை ஏற்படுத்துகிறது.

**1. மருத்துவம்**

AI உடன் நோயாளிகளின் முன்கூட்டிய கண்டுபிடிப்பு நோயாளிகளின் சிகிச்சை சிக்கல்களைத் தீர்க்க விரைவான முறைகள் வழங்கப்படுகின்றன.

**2. கற்றல்**

உத்தரவாதமான கல்வி முறைகளுடன் மாணவர்களின் திறனை அதிகரிப்பதில் செயற்கை நுண்ணறிவு உதவுகின்றது.

**3. சாதனைகள்**

கம்ப்யூட்டர் மற்றும் ரோபோக்கள் பல தொழில்களில் மனிதர்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

"கற்றல் என்பது மனிதர்களின் நினைவகம், ஆனால் நுண்ணறிவு என்பது இயந்திரங்களின் மூலமாகக் கற்றல்" – இயான் கூம்.

## II. புதிய முறைகள் மற்றும் எதிர்நோக்கு

2026ஆம் ஆண்டின் புதிய பரிமாணம் என்பது உலகில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன் செயல்படும் புதிய தருணங்களை உருவாக்கும் காலமாக இருக்கும்.

**1. புதிய தொழில்நுட்ப வளர்ச்சி**

ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன்கள் புதிய தொழில் நுட்பங்களில் வடிவமைக்கப்படும் – ஸ்மார்ட் அரிஸ்டன்டுகள், இயந்திர கற்றல் மற்றும் பெருந்தன்மை கணினி வளர்ச்சி ஆகியவை மேம்படுவதை நாம் காண்போம்.

**2. அறிவியல் கண்டுபிடிப்புகள்**

காலத்தின் பரிமாணங்களை மாற்றிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி இந்த ஆண்டில் முன்னேற்றம் பெறுகின்றன.

**3. அன்பு மற்றும் மனிதாபிமானம்**

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன், எத்தனை பெரிய சாதனைகளையும் நாம் எட்டினாலும், மனிதர்களின் உணர்வு, அன்பு மற்றும் சமூக ஒத்துழைப்பு அவசியமாகும். "அறிவியலின் துவக்கம்" மனிதனின் சிந்தனைதான். ஆனால் அதனை இயந்திரம் தொடங்கினால், அதன் வளர்ச்சி மக்களுக்கு சிறந்த காலங்களை உருவாக்கும். – ஸ்டீபன்.

## III. விவிலிய மேற்கோள்கள் : புது விடியலின் பூபாளமாய்

**1. புதிய தொடக்கம் (2 கொரி 5:17)**

"எனவே ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப்

படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையனக் கழிந்து புதியன புகுந்தன அன்றோ!" இந்த இறைவார்த்தை, புத்தாண்டு நேரத்தில் புதிய தொடக்கங்களை மற்றும் கிறிஸ்து பிறந்த புதிய வாழ்வை உறுதி செய்கின்றது. இது புதிய தீர்மானங்கள் மற்றும் புத்துணர்வின் அழுத்தத்தைக் கொடுக்கிறது.

**2. நம்பிக்கையும், கடவுளின் அருளும் (எசாயா 43:18-19)**

முன்பு நடந்தவற்றை மறந்துவிடுங்கள்; முற்கால நிகழ்ச்சிபற்றி சிந்திக்காதிருங்கள்; இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன். இப்பொழுது அது தோன்றிவிட்டது. நீ அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா? பாலைநிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன், பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன். இந்த இறைவார்த்தை, கடவுள் புதிய வாய்ப்புகள், வழிகாட்டி மற்றும் உத்தரவாதங்களை உருவாக்கும் என கூறுகிறது. இது புதிய வருடம், மற்றும் புதிய வாய்ப்புகளுக்கு அழைக்கின்றது.

**3. கடவுளின் திட்டம் மற்றும் நம்பிக்கை (எரேமியா 29:11)**

"உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும், நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல". இந்த இறைவார்த்தை, கடவுளின் திட்டம் நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் நல்லதற்காக இருக்கிறது என்பதை உறுதி செய்கின்றது. புதிய வருடத்தில் நம்பிக்கை வைப்பதே முக்கியமானதாகும்.

**4. புதிய திடமான பாதையில் நடக்க (எபேசியர் 4:22-24)**

"பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்துவிடுங்கள்; உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்." இந்த இறைவார்த்தை, புதிய மாற்றங்களைத் தகுந்த முறையில் நோக்குவது மற்றும் புதிய வாழ்வில் முன்னேறுவதை எடுத்துக்காட்டுகிறது.

**5. மிகவும் மகிழ்ச்சி (1 தெசலோனிக்கர் 5:16-18)**

"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள், இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். வேண்டுங்கள் எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்." இந்த இறைவார்த்தை, புத்தாண்டில் மகிழ்ச்சி, நன்றி மற்றும் மகிழ்ச்சியான மனப்போக்கின் முக்கியத்துவம் விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6. நேரம் மற்றும் காலம் (திருப்பாடல் 90:12)**

"எங்கள் வாழ்நாள்களைக் கணிக்க எங்களுக்கு கற்பியும், அப்பொழுது ஞானமிகு உள்ளத்தைப் பெற்றிடுவோம்". இந்த இறைவார்த்தை, ஆண்டின் முடிவில் நாம் கடந்து சென்ற காலத்தை மதிப்பிடுவதையும், வரும் காலத்தைப் பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற வாசகத்தை தெரிவிக்கின்றது.

**7. ஆன்மீக முன்னேற்றம் (பிலிப்பியர் 3:13-14)**

"கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு பரிசுபெற வேண்டி இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன்". இந்த இறைவார்த்தை, புத்தாண்டின் புது ஆரம்பத்தில், நாம் முன்னேற்றத்துக்கு எப்போதும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்பதையும் கூறுகிறது.

**IV. புதிய விடியலின் வழிநடத்தல் : ஒரு பார்வை**

புத்தாண்டு என்பது புதிய தொடக்கத்தின் அடையாளமாக உள்ளது. இது நம்முடைய கடந்த காலத்தை கடந்து புதிய நோக்கங்களுடன் வெற்றியை நோக்கி பூபாள விடியலில் பயணிக்க ஒரு அழைப்பு.

**1. நம்பிக்கையே நம் அடித்தளம்**

கடவுளின் அருளையும் உங்கள் முயற்சியையும் இணைத்து, எதாவது சாதிக்க முடியும் என்பதை நினைவில் வைக்கவும், எதிர்ப்புகள் வந்தாலும் உங்கள் மனதில் நம்பிக்கை வையுங்கள். "நம்பிக்கை இல்லாமல் வாழ்வது வீழ்ச்சிதரும். ஆனால் நம்பிக்கையுடன் செல்லும் ஒருவர் வெற்றி பெறுவார்".

**2. புதிய வாய்ப்புகளை அணுகுங்கள்**

புத்தாண்டில் ஒரு புதிய தொடக்கம் அதிக வாய்ப்புகளை உண்டுபண்ணுகிறது. நீங்கள் பலவிதமான வாய்ப்புகளை எதிர்கொள்வீர்கள். கடந்த வழிகளைப் பின்பற்றாமல், புதிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளவும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை கையாளுங்கள். 'எல்லாம் துவக்கமே ஆகும்'. அதன்பிறகு உங்கள் முயற்சியில் வெற்றியைக் காண்பீர்கள்.

**3. தியானம் மற்றும் அமைதி**

இந்த ஆண்டு உங்கள் மனதை அமைதியாகவும் தெளிவாகவும் வைத்துக்கொள்ளுங்கள். இந்த உலகில் எப்போதும் சிரமங்கள் இருக்கும். ஆனால் உங்களின் உள்அமைதி தான் உங்கள் வாழ்க்கையை மாற்றும். ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 நிமிடங்கள் தியானம் செய்யவும். "உள்ளுக்குள் அமைதியை உருவாக்குங்கள். அப்போதுதான் வெளிப்புற உலகமும் அமைதியாக இருக்கும்".

**4. கடின உழைப்பு மற்றும் பொறுமை**

உங்கள் கனவுகளை நிச்சயமாக அடைய நீங்கள் உழைக்க வேண்டும். ஆனால் கடின உழைப்புடன் பொறுமையும் அவசியம். ஆனால் கடின முடிவுகளை எதிர்பார்க்காதீர்கள். சிறு முன்னேற்றங்களையும் கொண்டாடுங்கள். "வெற்றிக்கு வழியில்லை" வெற்றியைக் காண விரும்பினால் நீங்கள் முயற்சிக்கும் வழியே உங்களைப் போகவிட வேண்டும்.

**5. கடவுளின் அருளை நாடுங்கள்**

இந்த ஆண்டில் கடவுளின் ஆசீர்வாதம் மற்றும் அருளின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை நடத்துங்கள். உங்கள் செயல்களில் கடவுளின் வழிகாட்டுதலுடன் சென்று நல்வாழ்வை எடுத்துப் பயணிக்கவும். "அவரின் வழிகாட்டுதலுக்கு தகுந்த அவர் அருளைப் பெறுவோம்".

**6. உங்கள் உடல் மற்றும் மனதை பராமரிக்கவும்**

இந்த ஆண்டில் மனதை பராமரிக்க கவனம் செலுத்துங்கள். ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி மற்றும் மனநலத்தை முன்னிறுத்துங்கள். அது உங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். "உங்கள் உடல் உங்களுக்கு மிக முக்கியமான வளம். அதைப் பராமரிக்கவும்".

**7. நம்பிக்கை, அன்பு மற்றும் இரக்கம் பரப்புங்கள்**

புத்தாண்டில் உங்கள் சுற்றுப்புறத்திலுள்ளவர்களுக்கு அன்பு, இரக்கம் மற்றும் சிரிப்புகளை பரப்புங்கள். அவர்களின் வாழ்க்கையில் உங்கள் சிறிய உதவியும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும். சமூக உதவிகள், குணம் மற்றும் மனப்பாங்கு ஆகியவை உலகத்தை மாற்றும் சக்தி கொண்டது. "உலகில் அன்பும் இரக்கமும் பரப்புங்கள். அது நம் உள்ளங்களையும் மாற்றும்".

**8. பழையதை விடவும் புதியவற்றை கற்றுக்கொள்ளுங்கள்**

புத்தாண்டில் புதியவற்றை கற்றுக்கொள்வதில் தடுமாறாதீர்கள். பழைய வழிகளுக்கு மட்டுபட்டு விடாமல் அறிவினை விரிவுபடுத்தவும் புதிய அனுபவங்களைப் பெறவும். "அறிவு என்பது தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு பயணம் அதை நிறுத்தாதீர்கள்".

**9. பொதுவுடைமை மற்றும் இணக்கம்**

சமூகத்தில் அனைவருடன் நல்ல உறவுகள் பேணுங்கள். ஒற்றுமையும், சமாதானமும் மிக முக்கியமான உங்கள் வழிகாட்டியுடன் ஒத்துழைத்து மற்றவர்களுக்கான உதவியை வழங்குங்கள். "எந்த ஒரு விஷயத்தையும் ஒரே நேரத்தில் அனைவருடன் இணைந்து செயல்படுவது சிறந்த வெற்றியைக் கொண்டுவரும்".

**10. நேரம் (சமயம்) மதிப்பீடு செய்யுங்கள்**

புத்தாண்டில் நம் நேரத்தை விருத்தியுடன், பயனுள்ள முறையில் பயன்படுத்துங்கள். முக்கியமான விஷயங்களுக்கு முன்னுரிமையாக வைத்துக் கொள்ளுங்கள். கடைசியில் நேரமும், குடும்பமும் மிக முக்கியம். "நாம் எவ்வாறு வாழ்கிறோமோ அவ்வாறே மெய்யாக வாழ்வோம்".

**V. புதிய முறைகள் மற்றும் எதிர்நோக்கு**

2026-ஆம் ஆண்டின் புதிய பரிமாணம் என்பது உலகில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் செயல்படும் புதிய தருணங்களை உருவாக்கும் காலமாக இருக்கும். இதன்மூலம்:

**1. புதிய தொழில்நுட்ப வளர்ச்சி**

ஆராய்ச்சி மற்றும் படைப்பாற்றல் திறன்கள் புதிய தொழில் நுட்பங்களில் வடிவமைக்கப்படும். ஸ்மார்ட் அகிஸ்டன்டுகள், இயந்திரக் கற்றல் மற்றும் பெருந்தன்மை கணினி வளர்ச்சி ஆகியவை மேம்படுவதை நாம் காண்போம்.

**2. அறிவியல் கண்டுபிடிப்புகள்**

காலத்தின் பரிமாணங்களை மாற்றிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி ஆகியவை இந்த ஆண்டில் முன்னேற்றம் பெறுகின்றன.

**3. அன்பு மற்றும் மனிதாபிமானம்**

தொழில் நுட்பத்தின் வளர்ச்சியுடன், எத்தனை பெரிய சாதனைகளையும் நாம் எட்டினாலும், மனிதர்களின் உணர்வு, பரிவு, அன்பு, சமூக ஒத்துழைப்பு அவசியமாகும். "அறிவியலின் துவக்கம் மனிதனின் சிந்தனைதான். ஆனால் அதனை இயந்திரம் தொடங்கினால், அதன் வளர்ச்சி மக்களுக்கு சிறந்த காலங்களை உருவாக்கும்"- ஸ்டீபன் ஹாக்கிங்.

**2026 - எதிர்கால நோக்கு பயணம்**

நாம் எதிர்நோக்கு செல்லும் பயணத்திலே இந்தப் புதிய ஆண்டில் உலகம் எங்கு செல்லப்போகிறது? இதனை நாம் கவனமாக பார்க்க வேண்டும்.

முன்னேற்றம், ஆற்றல் மற்றும் வெற்றி இந்த ஆண்டின் முக்கிய அம்சமாக இருக்கும். ஆயினும் நம்முடைய செயல்கள், மனிதாபிமானம் மற்றும் சமுதாய நலன்தான் இம்மாதிரி வளர்ச்சிக்கு வழிகாட்டும்.

**முடிவுரை**

"எழுச்சி நமதே, நம்பிக்கை நமதே!"

நேற்றை நினைவாகக் கொண்டு இன்றை நம்பிக்கையாகக் கொண்டு நாளை வெற்றியாக மாற்றுவோம். நம் மனங்களில் எழுச்சி பிறக்கட்டும், ஒரு புதிய விடியல்!

ஒவ்வொருவரின் கனவிலும் வெற்றியின் விதை முளைக்கட்டும். ஒவ்வொரு உழைப்பும் சமூகத்தின் நன்மைக்காக மலரட்டும்!

நம் ஒற்றுமையே வலிமை!

நம் நம்பிக்கையே நம் வழிகாட்டி!

அவற்றோடு சேர்ந்து நாம் சொல்லுவோம்!

நேற்றின் அனுபவம் நம் ஆசிரியர்!

இன்றின் உழைப்பு நம் ஆயுதம்!

நாளை நமக்குக் காத்திருக்கும் வெற்றி நம் பெருமை!

நம்மைத் தடுக்க வந்த சவால்களையும் தளராது எதிர்கொள்வதே நம் எழுச்சியின் அடையாளம்! ஏனெனில் ஒற்றுமை நமக்குள் உயிராக இருக்கும்வரை, நம் சமூகத்தில் ஒளி ஒருபோதும் மங்காது. நம்பிக்கையோடு முன்னேறுவோம். உழைப்பால் வெற்றி பெறுவோம்!

"இந்த புத்தாண்டு நம் மனங்களிலே உறுதியையும் நம் வாழ்வில் வளர்ச்சியையும் நம் சமூகத்தில் ஒற்றுமையும் பரவட்டும்!"

2026ஆம் ஆண்டில் நாம் கற்றுக் கொள்ளும், வளர்ச்சி அடையும் மற்றும் புதிய பரிமாணங்களைக் காண்போம். நம் உலகம் அறிவியலின் வளத்தால் முழுமையாக பாதைகளை அடைந்து அதனுடன் நமது சமூகத்தின் மேம்பாடு மனிதாபிமானம் மற்றும் ஒத்துழைப்பு முன்னேற்றத்திற்கு வழிகாட்டும்.

*"ஒவ்வொரு இதயமும் சொல்லட்டும்"*
*"எழுந்து நில்! நம்பி செய்!*
*முயன்று வெல்!"*
*"ஏனெனில் நாளை நமதே!*
*வெற்றி நமதே!"*

# சந்தித்த வேளை... மாற்றுப் பாதையின் சிறப்பு...

✍ மாரா

**முன்னுரை**

மேகமும் மலையும் சந்தித்த வேளை மழையின் பிறப்பு துவங்குகிறது. விதையும் மண்ணும் சேரும்போது புதிய தாவரம் பிறப்பெடுக்கிறது. சந்திப்பு என்பது மகிழ்ச்சியின், வாழ்வின், உயிராக்கத்தின் துவக்கமாகவும் வளர்ச்சியாகவும் அமையக்கூடும் என்பதை விவிலியத்தின் கதைமாந்தர்கள் வாழ்வு எடுத்துக்கூறுகின்றது. ஆதாம் – ஏவாளின் சந்திப்பு மனுக்குலத்தின் துவக்கமாக அமைகின்றது. மோசே – பாரவோனின் சந்திப்பு விடுதலைக்கு வழிவகுக்கின்றது. கபிரியேல் தூதர் – கன்னிமரியாளின் சந்திப்பு இயேசுவின் வருகைக்கும், எலிசபெத் – அன்னை மரியாவின் சந்திப்பு புதுவிதமான மகிழ்ச்சிக்கும், இயேசு – திருமுழுக்கு யோவானின் சந்திப்பு இயேசுவின் பணிவாழ்வுக்கும் ஆரம்பம் குறிப்பவையாக அமைகின்றன. இச்சந்திப்புக்கள் அனைத்தின் உள்நின்று கொண்டு மாற்றுப்பாதையின் துவக்கமாக அமைந்த சந்திப்பு விண்ணக ஞானமும் மண்ணக ஞானமும் சந்தித்த வரலாறு. இச்சந்திப்பு நமக்குத் தரும் பாடம் என்ன என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**ஞானிகள் யார்?**

மத் 2:1-12 வரையுள்ள இறைவார்த்தைகள் இயேசுவைக் காண கிழக்கிலிருந்து பயணம் செய்து வந்த ஞானிகளைப் பற்றிக் கூறுகின்றது. விவிலியம் எத்தனை ஞானிகள் என்பதையோ அவர்களின் பெயர்களையோ குறிப்பிட்டுக் கூறவில்லை. பல்வேறு ஆதாரங்களும் பல்வேறான செய்திகளை நமக்குத் தருகின்றன. குறிப்பாக, நிலத்தடிக் கல்லறைக் குகைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான ஞானிகளின் எண்ணிக்கையையும், அவர்கள் பெயர்களையும் தருகின்றன. பிரிஸில்லா நிலத்தடிக் குகை – 12, புனித பேதுரு நிலத்தடிக் குகை – 2, டோமிஷிலா கல்லறைக் குகை – 4 எனப் பல்வேறான எண்ணிக்கையைத் தருகின்றது. பொதுவாக



ஞானிகள் வழங்கிய மூன்று காணிக்கைகளைக் கணக்கில் கொண்டு மேற்கத்திய திருஅவை அவர்களின் பெயர்களை மெல்கியோர், காஸ்பர், பல்தஸார் என ஏற்றுக்கொள்கிறது. இப்பெயர்கள் ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த இலத்தீன் கையெழுத்துப்பிரதியில் காணப்படுகிறது. கிழக்கத்திய திருஅவைகள் வெவ்வேறு பெயர்களை வழங்குகின்றன. சிரியக் கிறிஸ்தவர்கள் லார்வண்டட், குஷ்னாலாப், ஹோர்மிஸ்தாஸ் எனவும் எத்தியோப்பியத் மரபுறுதித் திருஅவை ஹோர், கர்சுதான் மற்றும் பாஸானேற்றர் எனவும் வழங்குகிறது.

இவர்கள் வரலாற்றில் என்ன பெயர் கொண்டிருந்தாலும், எண்ணிக்கையில் எத்தனை பேராக இருந்தாலும் நாம் கருத்தில் கொள்ளவேண்டியது இவர்களின் செயல்பாடு. அவர்கள் யூதேயாவிற்கு கிழக்கு நாட்டிலிருந்து வந்த விண்வெளி ஆராய்ச்சியாளர்கள். இவர்களை மூன்று அரசர்கள் என வழக்கில் கூறினாலும், உண்மையில் இவர்கள் அரசர்கள் அல்ல. அரசவையில் பணிசெய்த விண்வெளிக் கலைஞர்களாக இருந்திருக்கக் கூடும். கண்டிப்பாக, கற்றறிந்தவர்களே. விண்ணில் ஏற்படுகின்ற மாற்றங்களை கண்டறிந்து அதற்கு உரிய விளக்கங்கள் நல்கும் திறன்

படைத்தவர்கள், நல்ல சிந்தனையாளர்கள். தேடலின் மகிமையையும், தேடிப் பெறுவதில் கிடைக்கும் மகிழ்ச்சியையும் தங்கள் வாழ்வால் பறைசாற்றியவர்கள்.

**சந்திப்பின் துவக்கம் தேடல்**

எல்லாச் சந்திப்புக்களும் தேடலில் தொடங்குவதில்லை எனினும் தேடலில் துவங்கும் சந்திப்புகள் அனைத்தும் உருமாற்றத்தில் முடியும் என்பதும் விவிலியம் சுட்டிக்காட்டும் உண்மை. யோவான் 1:35-42இல் இயேசுவைத் தேடி திருமுழுக்கு யோவானின் இரண்டு சீடர்கள் செல்கின்றனர். அவர்களின் தேடல் மெசியா யார்? அது இயேசுவாக இருக்குமோ? அவர் இருப்பிடம் எது? அவரின் செயல்பாடுகள் எவை? என்பதில் இருந்தது. தேடல் உயிர்தந்து, உரமூட்டி, வழிகாட்டி இயேசுவிடம் கொண்டு சேர்க்கிறது. தேடி அலைந்து திரியும் மான் தண்ணீர் தடாகத்தைக் காணும் வரை ஓய்வதில்லை. அதுபோல் இச்சீடர்களின் தேடல் இயேசுவை சந்திக்கும் வரை முடிவு பெறவில்லை. திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவின் (மெசியாவின்) அன்பர்களாகத் திரும்புகின்றனர். லூக் 19:1-10, சக்கேயுவின் தேடலைச் சுட்டிக்காட்டுகின்றது. 'தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசி இருக்கும், தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும்' என்னும் திரைப்பட பாடல் வரிகளையே மிஞ்சும் அளவிற்கு அமைந்திருந்தது அவரது தேடல். சக்கேயு இடம், தகுதி, சுற்றியிருந்தக் கூட்டம் என எதையும் பொருட்படுத்தவில்லை. தேடலின் பலன் இயேசுவுடனான சந்திப்பு. வரிவசூலிப்பவர், கொடையாளராக மாறுகின்றார். இவர்களின் வரிசையில் மத்தேயு நற்செய்தியாளர் வழங்கும் ஒரு அழகான தேடலின் காட்சி ஞானிகளின் கதை.

ஒரு நட்சத்திரம் விண்ணில் தோன்றுகிறது. இது புதிதாய் பிறந்திருக்கும் அரசக் குழந்தையின் ஒளி என்பது விளங்குகிறது. கற்றறிந்த பெரியோர் ஒரு குழந்தையைத் தேடி அலைய வேண்டுமென்பது அவசியமானதா என்ன? இருப்பினும் பரவாயில்லை, புறப்பட்டுச் செல்கின்றனர். பிறந்த குழந்தை வேற்று குழந்தை, வேற்று மொழியை, வேற்று நாட்டை, வேற்று மதத்தைச் சார்ந்ததாக இருந்தாலும், நன்மையும் உண்மையும் எங்கிருந்தாலும் ஆராதிப்பதில் தவறொன்றுமில்லை என அவர்களுக்குத் தோன்றியிருக்கும் போலும். தங்கள் நாட்டிலிருந்து தாங்கள் வந்து சென்றதையே நினைவில் வைத்துக் கொள்ள இயலாத, தனக்குக் கிடைத்த மரியாதையை திருப்பித் தர இயலாத குழந்தையைக் காண கடினமான பயணத்தை மேற்கொள்கின்றனர். இது எளிதான தேடலின் பயணம் அல்ல.

ஞானிகள் சிரியா பாலைவனம் வழியாகவே பெத்லகேம் வந்திருக்க வேண்டும். பாலைவனப் பயணம் என்பது பல இன்னல்களை உள்ளடக்கியது. பகலில் சுட்டெரிக்கும் வெயிலும், இரவில் உறையவைக்கும் குளிரும் என வெவ்வேறான பருவநிலையைக் கொண்டது பாலைவனம். இதனால் இங்கு ஆபத்திற்கும் பஞ்சமில்லை. பல வேளைகளில் உணவு, தண்ணீர் ஏதுமின்றி வாழும் நிலையும் ஏற்படும். இப்பயணம் பயணியின் உடல்நிலையையும் ஆன்மீக நிலையையும் கூட பாதிக்கும் அளவுக்கு கொடுமையானது. இருப்பினும் தேடலின் சுகமே அது கடந்து வரும் சவால்களில் தான் இருக்கும் என்பது போல் அனைத்து இடர்பாடுகளையும் கடந்து பெத்லகேம் வருகின்றனர்.

**சரியான பாதைக்கு வழிகாட்டும் தடங்கல்**

மனிதரின் எண்ணங்கள் கடவுளின் எண்ணங்கள் அல்ல, மனிதரின் வழிகள் கடவுளின் வழிகள் அல்ல (எசாயா 55:8). கடவுள் நல்கிய அறிகுறியைக் கண்டு அதனைப் பின்பற்றியவர்களாக இருப்பினும் மனித எண்ணங்கள் ஒரு தடைக்கல்லை அவர்கள் முன் வைக்கிறது. இந்த எண்ணம் அழியும் போதுதான் கடவுளைக் காணமுடியும். ஓர் அரசர் அரச மாளிகையில் தான் பிறக்க வேண்டும் என்பது மனித எண்ணம். "எண்ணம் போல் வாழ்க்கை" என்பதற்கிணங்க இதுவரை நடத்தி வந்த

விண்மீன் ஏரோது அரசமாளிகையின் அருகில் மறைந்துவிடுகிறது. மனித எண்ணத்திற்கு இத்தனை வலிமையுள்ளது போலும். கடவுளின் ஆற்றல் கூட அதனைத் தாண்டி செயலாற்றத் தயங்குகின்றது. ஏனெனில் நம்மைக் கேட்காமல் நம்மைப் படைத்த இறைவன் நம் அனுமதியின்றி நம்மை மீட்க விரும்புவதில்லை. கடவுள் நம்மை, நம் எண்ணங்களை மதித்து ஒதுங்கி விடுகிறார்.

எனவே, அரண்மனையில் சென்று அரசக் குழந்தையைத் தேடுகிறார்கள். ஏமாற்றம், குழந்தை அங்கு இல்லை. இஸ்ரயேலை ஆட்சி செய்யப் போகும் குழந்தை அரசமாளிகையில், பஞ்சுமெத்தையில் இல்லை என்பது அதிர்ச்சி. தங்களின் கணிப்பை அரண்மனைக்குள்ளே விட்டு வெளிவரும் துணிவு ஞானிகளுக்கு இருப்பது, நாமும் நம் தவறான எண்ணங்களை தூக்கி எறிந்துவிட்டு பயணிப்பதற்கான ஒரு அழைப்பு. தடங்கல் படிக்கல்லாக மாறுகிறது, பார்வை மாற்றம் நிகழ்கிறது. அரண்மனையை விட்டு வெளிவரும் ஞானிகளுக்கு மீண்டும் ஒரு இன்ப அதிர்ச்சி – அவர்களை வழிநடத்தி வந்த விண்மீன் இதோ அவர்கள் முன் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

**சந்திப்பு நல்கிய உடனிருப்பும் மாற்றுப்பாதையும்**

அனைத்து இடர்களிலும் தேடலின் கனவை கைகளில் ஏந்தி குழந்தை இருக்கும் இடத்திற்கு விண்மீனும் ஞானிகளும் வந்தடைந்தனர் (மத் 2:10). அங்கே குழந்தை ஏழைத்தாய் மரியா கரங்களில் தவழ்ந்து கொண்டிருந்தது. நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினார்கள். குழந்தையில் கடவுளைக் காண ஞானியரால் இயன்றது. தங்கள் அறிவின் மகிமையை மாற்றி வைத்துவிட்டு உயரம் குறைந்த மாட்டுத் தொழுவின் கதவுகள் வழியே தலைதாழ்த்தி செல்லுமளவிற்கு தாழ்ச்சியும் நிறைந்திருந்தது. இத்தாழ்ச்சிக்கு பரிசு இறைமகனுடன் ஒரு சந்திப்பு. ஒன்றும் திருப்பித்தரவில்லையெனினும், குழந்தை இயேசுவின் அழகிய புன்னகை, கொள்ளை கொள்ளும் அழகு அவர்கள் பெற்றுக்கொண்ட விலையுயர்ந்த கொடை. விண்ணக ஞானியுடனான மண்ணக ஞானிகளின் சந்திப்பாக இச்சந்திப்பு அமைந்தது. பெரிய உரையாடல்கள் நடைபெறவில்லை, முக்கியமான ஆவணங்கள் கையெழுத்தாகவில்லை. ஆனால் உடனிருப்பு பரிமாறப்பட்டது.

உடனிருப்பு என்னும் அழகிய அனுபவத்தை இழந்து பலர் தனிமை என்னும் தீயில் வாடிக்கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் உடனிருப்பின் மேன்மையை உணர்த்துவதாக அமைகின்றது இச்சந்திப்பு. உடனிருப்பின் பலன் மாற்றுப்பாதை. அன்பான ஒருவரின் உடனிருப்பு நம் வாழ்வுப் பாதையில் நிச்சயம் ஒரு மாற்றுப் பாதையைக் (நல்வழியை) காட்டுகிறது. ஏரோது வழிசென்று பெத்லகேம் வந்தவர்கள் மாற்று வழியாகச் செல்ல அழைப்புப் பெறுகின்றனர். விண்ணக ஞானியின் முடிவிற்கு தங்களை முழுவதுமாக ஒப்படைக்கின்றனர் நம் ஞானிகள். அவர்கள் அமைத்த பாதை அல்ல, கடவுள் அமைத்த பாதை பாதுகாப்பானது, உண்மையானது என்பதை உணர்கின்றனர். அடக்குமுறை, அதிகாரம், சுயநலம் என்னும் அரச உறைவிடங்களை விட்டு விலகி மாற்றுவழியில் செல்கின்றனர் (அன்பானவரிடம் பெற்ற அன்பு, பிறரன்பு, இரக்கம் என்னும் பண்புகளை கையில் ஏந்தியவர்களாய்).

**முடிவுரை**

ஞானிகளின் தேடலும் சந்திப்பும் நம் ஒவ்வொருவரின் ஆன்மீக வாழ்விலும் இருக்க வேண்டிய அம்சங்கள். கடவுளைத் தேடுதலும், அவரைக் கண்டடைதலும், அவர் நம்மையும் கண்டடையும்படியான வாழ்வு வாழ்தலும் நம்மையும் கடவுளின் தூதுவர்களாகவும் மாற்றுப்பாதையை அமைத்துக் கொண்டவர்களாகவும் வாழ வழிசெய்யும் என்பதில் ஐயமில்லை. இப்பயணம் கடினமானதாக அமைந்தாலும், அவற்றைக் கடந்து வரும் மனத்துணிவும், நம் மனதில் குடியிருக்கும் நம் கடவுளைக் கண்டடையவும் அவருடன் உடனிருக்கவும் உருமாறிய வாழ்வு வாழவும் ஞானிகள் தேடல் நம்மை அழைக்கின்றது.

# சந்தித்த வேளையில்...

✍ திருமதி. **ஜாக்குலின் பிரிட்டோ,** சிவகங்கை

"உன்னை நான் சந்தித்தேன் – நீ

ஆயிரத்தில் ஒருவன்" என்ற பாடல் வரிகள் எனக்கு நினைவில் வருகின்றது. ஆம்! நாம் சந்தித்த மனிதர்களின் எண்ணிக்கை ஏராளம்! ஏராளம்! அவர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் ஏராளம்!

அன்பு, ஆச்சரியம், மகிழ்ச்சி, புகழ்ச்சி, நம்பிக்கை, பிரியம், கசப்பு, வெறுப்பு, ஏமாற்றம், அலட்சியம், பொறாமை, உதவி, ஆதாரம், ஆர்வம், பொறுமை, தாழ்ச்சி, மன்னிப்பு, நட்பு, ஏற்றம், பக்தி, ஆசீர், அர்ப்பணிப்பு... எனச் சொல்லிக்கொண்டே போகலாம். விவிலிய மாந்தர்கள் சந்தித்தபோது, நிகழ்ந்தவைகளை கண்டு உணர்வோம்.

**காயின் - ஆபேல் சந்திப்பு**

இரு சகோதரர்களும் வயல்வெளியில் சந்தித்தபோது பொறாமையின் நிமித்தம் கொலை நடந்தது. (தொநூ 4:8)

**யாக்கோபு - ஏசா சந்திப்பு**

சகோதரர்கள் இருவரும் அரவணைத்து, கட்டித்தழுவி, முத்தமிட்டு, மகிழ்ச்சி கண்ணீர் சிந்தினர். (தொநூ 33:4)

**இத்திரோ - மோசே சந்திப்பு**

மோசே தன் மாமனார் இத்திரோவை சந்தித்தபோது, அவர்முன் தாழ்ந்து பணிந்தார். ஒருவர் ஒருவரிடம் நலம் விசாரித்தனர் என வாசிக்கின்றோம். (விப 18:7)

**அன்னா - ஏலி சந்திப்பு**

அன்னா குழந்தைப் பேற்றிக்காக, மனம் கசந்து அழுது புலம்பி, ஆலயத்தில் ஆண்டவரிடம் மன்றாடிய போது, அவரைக்கண்ட குரு ஏலி, அவருக்கு ஆறுதல்கூறி, ஆசி வழங்குகிறார். (1 சாமு 1:17)

**தாவீது - சவுல் சந்திப்பு**

தாவீதைக் கொல்வதற்காக சவுல் பாலைநிலத்தில் தேடி அலைந்தான். ஆனால் தாவீது, சவுலைக் கொல்வதற்கு வாய்ப்பு கிடைத்தபோது, ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல், நான் கைவைக்க மாட்டேன் என்று சவுலைக் கொல்லாமல் சென்றபோது, தாவீதின் அர்ப்பணிப்பும், மன்னிப்பும் மேலோங்கி நிற்கிறது. (1 சாமு 24)

**சாலமோன் - சேபா நாட்டு அரசி சந்திப்பு**

சாலமோன் அடைந்திருந்த புகழைப்பற்றி கேள்வியுற்ற அரசி, சாலமோனை சந்திக்க அரண்மனைக்கு செல்கிறார். அவரின் ஞானத்தையும் மேன்மையையும் கண்டுகொண்ட அரசி, இவ்வாறு புகழ்ந்தார் என அரசர்கள் முதலாம் நாளில் வாசிக்கின்றோம். "உண்மையில் நான் கேள்விப்பட்டதைவிட, உம் ஞானமும், செல்வமும் மிகுதியாய் இருக்கின்றன". (1அர 10:7)

**எலிசா - ஏழைக் கைம்பெண் சந்திப்பு**

ஏழைக் கைம்பெண்ணை, இறைவாக்கினர் எலிசா சந்தித்தபோது, அவரின் ஏழ்மை நிலையை அறிந்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்கள் பாத்திரத்தில் எண்ணெய் பெருகச் செய்து, அவர்களின் கடன் தீர்ந்து போனதாக அரசர்கள் 2-ம் நூலில் வாசிக்கின்றோம்.

**வானதூதர் - மரியா சந்திப்பு**

வானதூதர் மரியாவிற்கு தோன்றி வாழ்த்துரை வழங்கியபோது, மரியா தன்னை முழுவதுமாக ஆண்டவரிடம் ஒப்படைத்தார் "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:38)

**மரியா - எலிசபெத் சந்திப்பு**

மரியா எலிசபெத்தை சந்தித்து வாழ்த்தியபோது, எலிசபெத்தின் வயிற்றில் உள்ள குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியதாக வாசிக்கின்றோம். அதுமட்டுமல்ல, "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றோர்" (லூக்கா 1:45) என்கிறார் எலிசபெத். இங்கு எதிர்நோக்கின் சாட்சியாய் மரியா விளங்குவதை எடுத்துரைக்கிறார்.

**இயேசு - சக்கேயு சந்திப்பு**

இயேசுவைச் சந்திப்பதற்காக, அவர் சென்ற வழியில் மரத்தின்மீது ஏறி, சக்கேயு காத்திருந்தார். அதைக்கண்ட இயேசு, நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என்று சொல்வதும், சக்கேயு ஆண்டவரிடம் தன் பாவங்களுக்காக மன்னிப்பு வேண்டுவதும், சக்கேயு மீட்பு பெறுவதும் நடைபெறுகிறது.

இன்னும் ஏராளமான சந்திப்புகளை விவிலியத்தில் காணும்போது, பிரமிப்பு அடைகிறோம். இந்தப் புதிய வருடத்தில், இயேசுவின் பிள்ளைகளாகிய நாம், எப்படிப்பட்ட சந்திப்புகளை எதிர்நோக்கி இருக்கின்றோம். நாம் சந்திக்கும் மனிதர்களிடம் அன்பையும், அரவணைப்பையும், மகிழ்ச்சியையும், அமைதியையும், மன்னிப்பையும், ஆசீரையும், நல் உறவையும் பகிர்ந்துகொள்ளும் மக்களாக வாழ உறுதி எடுப்போம்.

ஆண்டவரே! "உம்மை வருத்தும் வழியில் நான் செல்கின்றேனா என்று பாரும்; என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும்". (திருப்பாடல் 139:24)

# குழந்தைகளை நல்வழிப்படுத்த பெற்றோர்களுக்கான ஆலோசனைகள்

✍ அருள்சகோ. **மெர்சி**
கொடைக்கானல்

❖ **புதிய இலக்குகளை நிர்ணயிக்க ஊக்குவிக்கவும்**

உதாரணமாக, "இந்த ஆண்டு நாள் தினமும் 10 பக்கங்கள் படிக்க முயற்சிப்பேன்" அல்லது "என் பொம்மைகளை நானே ஒழுங்காக அடுக்குவேன்" போன்ற எளிய இலக்குகளை அவர்கள் தேர்வு செய்ய உதவலாம்.

❖ **நல்ல பழக்கவழக்கங்களை அறிமுகப் படுத்தவும்**

தினமும் பல் துலக்குவது, குறித்த நேரத்தில் தூங்குவது, காலையில் சீக்கிரம் எழுவது போன்ற ஆரோக்கியமான பழக்கங்களை பின்பற்ற அறிவுறுத்தலாம்.

❖ **மற்றவர்களுக்கு உதவக் கற்றுக் கொடுக்கவும்**

வீட்டில் பெற்றோருக்கும், பள்ளியில் நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உதவுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கலாம்.

❖ **நேரத்தை சரியாகப் பயன்படுத்த கற்றுக்கொடுக்கவும்**

விளையாடுவது, படிப்பது மற்றும் குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கச் சொல்லலாம்.

❖ **நன்றியுணர்வுடன் இருக்கச் சொல்லவும்**

தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளுக்கும், பெற்றோரின் அரவணைப்புக்கும் நன்றி சொல்லும் பழக்கத்தை ஏற்படுத்தலாம்.

❖ **கடின உழைப்பின் பலனைப் பற்றிப் பேசவும்**

படிப்பில் கவனம் செலுத்தி, விடாமுயற்சியுடன் செல்பட்டால் நல்ல எதிர்காலம் அமையும் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கலாம்.

❖ **தன்னம்பிக்கையை வளர்க்கவும்**

"என்னால் முடியும்" என்ற நேர்மறை எண்ணத்தை அவர்களிடம் விதைத்து, தடைகளைத் தாண்டி சாதிக்க ஊக்குவிக்கலாம்.

❖ **புத்தக வாசிப்பை ஊக்குவிக்கவும்**

தினமும் சிறிதுநேரம் புத்தகம் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளச் சொல்லலாம்.

# வாலிபனே விழித்தெழு!

நல்லாசிரியர் **கவிஞர் எல். பிரைட்,** தேவகோட்டை

வாலிப வயதில் வீழ்ந்து விடாதே
அதுதான் வாழ்கின்ற காலம்
சோர்ந்துவிடாதே
வீண் பொழுதுக்காரனுக்கும்
வீச்சமெடுத்த பிணத்துக்கும்
வித்தியாசமில்லை மறந்துவிடாதே
இனிமேலாவது விழியின் வாசலில்
கண்ணீர் தெளிக்காமல்
இமையின் முற்றத்தில்
கோலம் போடக் கற்றுக்கொள்
கவனம் கண்ணீர்த்துளி
கடலை விட ஆழமானது
ஆபத்தானது
பாவை விழிகளுக்கும்
போதைத் துளிகளுக்கும்
அடிமையான பின்பு
தாயின் மார்புக்குக் கூட
விலைபேச நீ தயங்கமாட்டாய்
உறக்கம் மயக்கம் தயக்கம் மூன்றும்
முன்னேற்றப்பாதையின்
முள்வேலித்தடுப்புகள்
அலட்சியங்களை அலட்சியம் செய்
குறிபார்த்துவிட்டு இலக்குகளைத் தேடாதே
இலக்குகளை நிர்ணயித்துவிட்டு பின் குறிபார்
வாழ்க்கை இருட்டு
இலட்சியங்களின்
கரம் பிடித்துக் கொண்டால்
வெளிச்சத்தில் நடக்கலாம்
கேடயங்களை தயார் செய்துகொண்டு
ஆயுதங்களைத் தூக்கு
தற்காப்பே தலைகாக்கும் கவசமாகும்
சிக்கலான நூலை சீர்படுத்தத் தெரிந்து கொண்டு
ஊசியில் நூல் நுழைத்து
உடை தைக்கத் தொடங்கு
எமனை விடவும் ஆபத்தானவர்கள் எதிரிகள் அல்ல
அன்பர்கள் போல நடிக்கின்ற
நண்பர்களே எச்சரிக்கை!

## கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு - சிவகங்கை மறைமாவட்டம்
## தொடர் விவிலியப் போட்டி - ஜனவரி 2026

**முதல் சுற்று : 1 குறிப்பேடு 23 - 2 குறிப்பேடு 15 வரை**

### I. ஒரே வார்த்தையில் விடையளி 5x1=5

1. பெலேகு என்பதன் எபிரேய பொருள் என்ன?
2. பாகால் பெராசிம் என்பதன் எபிரேய பொருள் என்ன?
3. தாவீது கோட்டைக்குள் வாழ்ந்ததன் காரணமாக அது எவ்வாறு அழைக்கப்பட்டது?
4. சவுல் தம் எவற்றை முன்னிட்டு மடிந்தார்?
5. மக்களினங்கள் தெய்வங்கள் அனைத்தும் வெறும் எவைகளே?

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக 5x1=5

1. அம்மோனியர்க்கு உதவிசெய்ய ...................... என்றுமே விரும்பவில்லை.
2. ஆண்டவரின் தூதர் .................... நோக்கி எபூசியனான ஓர்னானின் களத்திற்குச் சென்று ஆண்டவருக்கு பலிபீடம் எழுப்புமாறு ......................... க்கு சொல் என்றார்.
3. நான் அருள்பொழிவு செய்தாரை ................. என் இறைவாக்கினர்க்கு ..........................
4. தாவீது ஆண்டவருக்கு நன்றிப்பாடல் பாடும் பொறுப்பை .............. அவர் உறவின் உறவினருக்கு முதலாக அளித்தார்.
5. வெள்ளம் அடித்துக்கொண்டு போவதுபோல .............. என் எதிரிகளை என் ............ அழித்துவிட்டார்.

### III. சரியா? தவறா? கண்டுபிடி. 5x1=5

1. உம் ஊழியர்களாகிய இஸ்ரயேல் மக்களுக்காக இரவும் பகலும் இன்று உம் திருமுன் மன்றாடுகிறேன்.
2. நான் இரவில் பள்ளத்தாக்கு வாயில் வழியாக வெளியே சென்று, நீரூற்றைக் கடந்து, 'குப்பைமேட்டு' வாயிலுக்கு வந்தேன்.
3. அவர்களின் குற்றத்தை முடிவிடாதேயும்! அவர்களின் பாவத்தை உம் முகத்திலிருந்து கழுவ விடாதேயும்! ஏனெனில், கட்டுவோரை இழித்துரைத்தார்கள்.
4. என் இறைவா! இம்மக்களுக்கு நான் செய்துள்ள எல்லா நன்மைகளுக்கும் எனக்கு ஆதரவாயிரும்.
5. அவர்கள் பசியாயிருக்கையில், விண்ணிலிருந்து உணவு அளித்தீர்! அவர்கள் தாகமாயிருக்கையில், பாறையிலிருந்து தண்ணீர் புறப்படச் செய்தீர்!

### IV. பொது அறிவு 5x1=5

1. ஒளியின் மறையுண்மைகளை வகுத்து தந்தவர் யார்? எப்போது?
2. திருநீற்றுப் புதன் அன்று இறந்த புனிதர் யார்?
3. நமது மறைமாவட்டத்தில் ஐம்பதாவது பங்கு எது?
4. நம்பிக்கை அறிக்கை எத்தனை பகுதிகளைக் கொண்டது?
5. திருவழிபாட்டில் எத்தனை திருவிழிப்பு நாள்கள் இருக்கின்றன?

### V. தேடி கண்டுபிடி 5x1=5

1. இஸ்ரவேலின் கடவுளாகிய ஆண்டவருக்கு ஒரு கோவிலைக் கட்டுவார்களாக! எருசலேமில் இருக்கும் அவரே கடவுள்!
2. பாபிலோன் மன்னர் சைரசு தம் ஆட்சியின் முதலாம் ஆண்டில் கடவுளின் இக்கோவிலைக் கட்ட ஆணையிட்டார்.
3. அகாவா ஆற்றை விட்டு எருசலேமுக்குப் புறப்பட்டோம். எங்கள் கடவுளின் அருட்கரம் எங்களோடு இருந்ததால் போகும் வழியில் நாங்கள் எங்கள் பகைவருடைய கையினின்றும் திருடருடைய கையினின்றும் பாதுகாக்கப்பட்டோம்.

4. குரு எஸ்ரா எழுந்து அவர்களைக் பார்த்துக் கூறியது: "நீங்கள் வேற்றினப் பெண்களை மணந்ததால் பற்றுறுதியற்றவர்களாகி, இஸ்ரயேலின் பாவத்தைப் பெருகச் செய்துள்ளீர்கள்".
5. அசாலேயின் மகனான யோனத்தானும், திக்வாவின் மகனான யாகிசியாவும்மே இதை எதிர்த்து நின்றனர்.

## VI. குறுக்கெழுத்துப் போட்டி 10x1=10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1,2 | | | | | |
| | | | 3 | | 4 |
| 5 | | | | | |
| | | 6 | | 7 | |
| | | | | 8 | 9 |
| 10 | | | | | |

**I. இடமிருந்து வலம்**

1. கெருபுகளின் ............. பின்னப்பெற்றிருந்தன.
5. நீ அவரைப் புறக்கணித்தால் அவர் உன்னை என்றென்றும் ........................
10. என் ............... நாடினால், வானத்திலிருந்து அவர்களது மன்றாட்டுக்களைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன்.

**II. வலமிருந்து இடம்**

3. ஆண்டவரின் பேழை வைக்கப்பட்டிருந்த இடங்கள் ................ பெற்றவை.
6. கணக்கற்ற உம் மக்களுக்கு .............. வழங்க யாரால் முடியும்.
9. கதவுகளை வெண்கலத் .................. மூடினார்.

**III. மேலிருந்து கீழ்**

2. எவரையும் பெருமைப்படுத்துவதும் வலியவராக்குவதும் ................ உள்ளன.
4. நீர் ..................... ஆய்ந்தறிபவர் என்றும், நேரியனவற்றை நாடுபவர் என்றும் நான் அறிவேன்.

**IV. கீழிருந்து மேல்**

7. விண்ணகத்திலிருந்து .................. அவர்கள் வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செவிசாய்த்து அவர்களுக்கு வெற்றி அளிப்பீராக.
8. எண்பதினாயிரம் பேரை மலையில் ..................... வெட்டவும்

## குறிப்பு

1. தொடர் விவிலியப் போட்டி ஆனந்த கங்கைத் தூது இதழில் வெளிவரும்.
2. விவிலியத்தைப் படித்து பயன்பெறவும், போட்டியில் ஆர்வத்தோடு அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவும் அழைக்கிறேன்.
3. ஆனந்த கங்கைத் தூது இதழில் ஒரு மாதம் கேள்வியும் பிரதி மாதம் அதற்கான பதில்களும் வெளிவரும்.
4. தொடர் விவிலியப்போட்டி ஆறு சுற்றுகளாக வெளிவரும். வழக்கம்போல பரிசுகள் மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும் வழங்கப்படும்.
5. பெயர், முகவரி, தொலைபேசி எண், பங்கு முதல் பக்கத்தில் குறிப்பிடல் அவசியம்.
6. விடைகள் யாவும் நூல், அதிகாரம், வசனம் இவைகள் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
7. விடைகள் **ஜனவரி 20.12.2026-ம் தேதிக்குள்** அனுப்பப்படல் வேண்டும்
8. குறிப்பிட்ட நாளுக்குள் வந்து சேராத விடைத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. விடைகள் தனித்தாளில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி : அருள்பணி. **ஜீவன் கிரிசாந்த்,** செயலர், கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு வியான்னி அருள்பணி மையம், மதுரை ரோடு, சிவகங்கை - 630 561. **செல் : 63821 92028**

# ஆய்வும் சுயஆய்வும் – தொடர்

✍ அருள்பணி. ஜெ. மரிய அந்தோணி
வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை

## 71. தேட வைக்கும் தேவை

**ஆய்வு**

ஜார்ஜ் லெகுனர் (George Lehnar) மற்றும் எல்லா க்யூப் (Ella Kube) என்ற இரு உளவியலாளர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு இது. இதைப்பற்றிய செய்தியை தங்களது புத்தகம் "The Dynamics of Personal Adjustment" என்ற புத்தகத்தில் விவரித்து இருக்கிறார்கள்.

ஓர் அறையின் ஒரு பக்கத்தில் பாலாடைக் கட்டியை (cheese) வைத்தனர். அறையின் நடுவில் ஒரு கம்பிவலையை நிறுத்தினர். அக்கம்பிவலையில் மெல்லிய மின்சாரத்தை பாய்ச்சினர். அறையின் மறுபக்கத்தில் ஓர் எலியை வைத்தனர்.

பரிசோதனையின் முதற்கட்டமாக எலிக்குப் போதுமான அளவு உணவு கொடுத்து பின் அதை அந்த அறையில் வைத்தனர். அறையில் விடப்பட்ட எலி அவ்வறையின் மறுமுனையில் பாலாடைக்கட்டி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தது. பாலாடைக்கட்டி என்பது எலிக்கும் மிகவும் பிடித்தமான உணவு!! எனவே அதை நோக்கி நகர முனைகையில் இடையில் இருந்த கம்பிவலை லேசான மின்அதிர்ச்சியை எலிக்கு கொடுத்தது. எனவே எலி தன் முயற்சியைக் கைவிட்டது.

பரிசோதனையின் அடுத்தகட்டமாக ஆய்வாளர்கள் அந்த எலியை மிகவும் பசியான நிலையில் அதே அறையில் உலாவவிட்டனர். அறையின் மறுபக்கத்தில் பாலாடைக்கட்டிகள் வைக்கப்பட்டதைப் பார்த்த எலி அதை நோக்கி நகர ஆரம்பித்தது. தற்போது மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிவலை குறுக்கிட்டது. எனினும் எலியானது தனது முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் மீண்டும் அந்தக் கம்பிவலையைத் தாண்டிச்செல்ல முயற்சி எடுத்துக் கொண்டேயிருந்தது. ஒரு நேரத்தில் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிவலையைத் தள்ளிவிட்டு தன் உணவை நோக்கி நகர்ந்தது.

**சுயஆய்வு**

'பசியாய் இருக்கின்ற போது உணவைத் தேடுவது இயல்புதானே. இந்த ஆய்வில் புதிதாக செய்தி ஏதுமில்லையே' என்று நாம் நினைக்கக்கூடும். எனினும் இவ்வாய்வு நம்மைப் பற்றியும் நாம் வாழும் சமூகத்தைப் பற்றியும் இரண்டு செய்திகளை நமக்குச் சொல்கிறது. ஒவ்வொன்றாகச் சிந்திக்கலாம்.

(அ) நம் குழந்தைகளது தேவைகள் அனைத்தையும் நாமே பூர்த்தி செய்துவிட்டு, அவர்களுக்குள் தேடல் மனநிலை வரவேண்டும் என்று எதிர்பார்த்தோம் என்றால் அது நடக்காது என்பதே மேற்கண்ட ஆய்வு நமக்குச் சுட்டிக்காட்டக்கூடிய முக்கியமான செய்தி. இன்றைய பல பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு தேவைக்கு அதிகமாகவே கொடுக்கின்றனர். எனினும் தங்களது குழந்தைகள் வாழ்க்கைப் பந்தயத்தில் போட்டியிட்டு வெற்றி பெறவேண்டும் என்றும் எண்ணுகின்றனர். இது வயிறு நிரப்பப்பட்ட எலி தடைகளைத் தாண்டி பாலாடைக்கட்டியை நோக்கி நகர வேண்டும் என்று எண்ணுவது போன்றது.

நம் குழந்தைகளுக்குள் தேடல் மனநிலையும் வெற்றிபெற வேண்டும் என்ற ஊக்கமும் இருக்கவேண்டுமெனில், அவர்கள் கொஞ்சமேனும் 'பசியோடு' இருப்பது அவசியமானது. அவர்களது சில தேவைகள் பூர்த்தியாகாமல் இருந்தால்தான், தங்களுக்குத் தேவையானவற்றைத் தாங்களே தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் வரும். எனவே அன்பு பெயரில் அவர்களுக்குத் தேவையானவற்றையும் கொடுத்தோம் என்றால், அவர்களுக்குள் இருக்கின்ற தேடல் மனநிலையை நாமே மழுங்கடிக்கின்றோம் என்று அர்த்தம்.

(ஆ) சமூகத்தில் நடக்கும் பல பிரச்சனைகளுக்கான காரணத்தை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. மனிதர்கள் உயிர்வாழ வேண்டுமெனில் அவர்களது நியாயமான தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். எந்த ஒரு சமூகம்

மனிதர்கள், முக்கியமாக ஏழை எளியவர்கள், தங்களது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு ஒரு தகுந்த சூழலை அமைத்துக் கொடுக்கின்றதோ அச்சமூகத்தில் பெரிய அளவில் பிரச்சினைகளும் வன்முறைகளும் வருவதற்கான வாய்ப்பு கிடையாது.

இதற்கு மாறாக, ஒரு சமூகத்தில் அநீதி மலிந்து, வாய்ப்புகள் குறைந்து காணப்பட்டால் மனிதர்கள் எப்பாடுபட்டேனும் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யது ஆரம்பித்து விடுவார்கள். திருடுதல், ஏமாற்றுதல், வன்முறையில் ஈடுபடுதல் போன்றவற்றின் ஆரம்பப்புள்ளி இதுவே. இத்தகைய எதிர்மறையான காரியங்களை புறச்சட்டங்கள் கொண்டு கட்டுப்படுத்த முனைந்தால் அவற்றைத் தூக்கியெறிவதற்கான வாய்ப்புகள்தான் அதிகம். இதையே மின்அதிர்ச்சி தந்த கம்பிவலையை எலி தள்ளிவிட்டது நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறது. ஒரு முதிர்ச்சியான சமூகம் என்பது புறக்கட்டுப்பாடுகளை அதிகம் திணிப்பதை விட்டுவிட்டு மனிதர்கள் தங்களது நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு அதற்கான சரியான வாய்ப்புகளை வழங்குகின்ற சமூகம் ஆகும்.

புதிய ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம். ஆண்டு புதிதாக இருப்பதோடு, நம் மனநிலையும் புதிதாக இருந்ததென்றால், நம் வாழ்க்கைச் சக்கரம் சரியான திசையில் இயங்கும். இன்னும் சொல்லப்போனால் நம் மனநிலையை தொடர் புதுப்பித்தல் நிலையில் வைத்துக்கொண்டோம் என்றால், ஒட்டுமொத்த வருடமே நமக்குப் புதிதாகத்தான் தெரியும்.

# ஞானிகள் சந்திப்பு

✍ ஜெ. ஹில்டா மேரி
பாம்பன்

கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் சந்திப்பு...
மூன்று ஞானிகள் சந்திப்பு...
பிறந்த யூத அரசர் எங்கே...
அவர்களைக் காணப்போகிறோம் என்று சொல்லி
ஏரோதின் சந்திப்பு..
மாபரனைக் காண வழிகாட்டும் வழியாக
விண்மீன் சந்திப்பு...
பாலன் இயேசுவைப் பார்க்க யாரும்
வரவில்லையே என்று
மாதா நினைக்கும்போது
அதிசயமான அபூர்வமான சந்திப்பு...
மாமரிக்கு ஒட்டகத்தில் வந்த
அவர்களைக் கண்டு
பயமும் பதட்டமும் தோன்றும்போது
நீண்ட அங்கியுடன் நெடுஞ்சாண் கிடையாக
விழுந்து எழுந்து வணங்கும் போது
அங்கே ஒரு சந்திப்பு...
பொன்னும், சாம்பிராணியும்,
வெள்ளைப் போளமும்
காணிக்கையாக தரும்போது
திருக்காட்சி சந்திப்பு
சிறந்தோங்குகிறது ஆங்கே...
திருவிவிலியத்தில் அந்த சந்திப்பு
ஒரு தெய்வீக சந்திப்பே...
மத்தேயு நற்செய்தியில் இடம்பெறும் இந்த
சந்திப்பு சாதாரண சந்திப்பா?
கிறிஸ்து பிறப்பு விழாவிற்குப் பின்வரும்
திருக்காட்சிப் பெருவிழாவில்
இந்த சந்திப்பு மகிமைப்படுத்தப்படுகின்றதே!
மெல்கியோர், கஸ்பார், பல்தசார்
என்ற இவர்களின் சந்திப்பு
மாபரன் இயேசு பிறந்த மாடடைக் குடிலில்
காட்சிப்படுத்தப்படுகின்றதே!
இவர்கள் ஞானிகளா?
அரசர்களா?
என்று கேள்வியும் எழுகின்றதே!
திருப்பாடல் 72:4ல் உள்ளபடி
இவர்கள் அரசர்களாகவும்
இருக்கலாம்...
எப்படி இருந்தாலும்
இந்த ஞானிகள் சந்திப்பு
மேன்மைமிக்கதே
இவர்கள் நமக்குக் கூறும் செய்தி
விழுந்து பணிந்து வணங்குவதே,
உள்ளத்தில் நல்ல
சிந்தனையோடு...

நீமொ 13:4 சோம்பேறிகள் உண்ண விரும்புகிறார்கள்; உணவோ இல்லை; ஊக்கமுள்ளவரோ உண்டு கொழுக்கிறார்.

# இளையோர்களின் பாதுகாவலர் புனித ஜான் போஸ்கோ

✍ சகோ. ஜெனஸ் CIC
மானாமதுரை

"இளைய சமுதாயமே எழுந்து வா!
இறைவன் உங்களை அழைக்கிறார்!
அன்பு செய்கிறார், அரவணைக்கிறார்"

என்றுகூறி, இளையோர்களுக்காகவே தன் வாழ்நாள் எல்லாம் உழைத்து, ஆன்மீகத்திலும், பொருளாதாரத்திலும் அவர்களை முன்னேற்றியவர் புனித ஜான் போஸ்கோ என்றால் அது மிகையாகாது. இவரை இளையோர்களின் பாதுகாவலர் என்று அழைக்கலாம்.

எத்தனை ஆண்டுகள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல, மாறாக எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியம் என்ற பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து சரித்திரம் படைத்த வரலாற்று நாயகன்தான் தந்தை ஜான் போஸ்கோ. வறுமையில் பிறந்து, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் துன்பப்பட்டு உழன்றபோது, தான் பட்ட துன்பங்களை இவ்வுலகில் எந்த இளையோரும் படக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் இறையன்பு, பிறர்அன்பு என்பதன் அடிப்படையில் இளையோர்களின் நல்வாழ்வுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட புனித ஜான் போஸ்கோவின் வழியே தனிவழி.

ஜான் போஸ்கோ தனது 9-ஆவது வயதில் ஒரு கனவு காண்கிறார். இதில் பல இளையோர்கள் குடித்துக் கொண்டும், ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டும், அடித்துக்கொண்டும், பல பாவச்செயல்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருப்பதாகக் கண்ட ஜான் போஸ்கோ கோபம்கொண்டு அவர்களை அடிக்கச் செல்கிறார்.

அப்பொழுது வெண்ணாடை அணிந்த ஒரு மனிதர் ஒருவர் காட்சியில் தோன்றி, "என் இனிய மகனே, அவர்களை அடிக்காதே! அன்பால் திருத்து" என்றார். அதற்கு ஜான்போஸ்கோ எங்ஙனம் இச்செயலை இந்த வயதில் செய்யமுடியும்? என்றார். அதற்கு அந்த மனிதர், "மகனே, உனக்குத் துணையாக என் அன்னையை அனுப்புவேன்" என்று கூறி மறைந்தார். பின் அந்த வாலிபர்களைப் பார்த்தார். அந்த இடத்தில் கொடிய விலங்குகள் கூட்டமாய் இருப்பதைக் கண்ட ஜான் போஸ்கோ, அவைகள் செம்மறிகளாக மாறுவதையும் கண்டார். அதன்பின் அவர் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டார். தான் கண்டது கனவு என்றாலும், எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் வாழ்க்கை நிகழ்ச்சி என்பதை உணர்ந்தார். இவ்வாறு பலமுறை கண்ட கனவுகள் அவரது வாழ்வில் நனவாகி இருக்கின்றன.

மின்னலென விரைந்து கொண்டிருக்கும் இன்றைய நுகர்வு கலாச்சாரத்தில் பொருள்குவிப்பு என்பதே மனித வாழ்வு என்றாகிவிட்டது. இத்தகைய சூழலில் ஆன்மீக சிந்தனைகளை மனித மைய நோக்கோடு இளையோருக்குக் கற்பிக்கும் பணி என்பது ஒரு சவால், தொலைத்தொடர்பு சாதனங்களும், மின்வலையும் மனித விழுமியங்களை விழுங்கி, சிந்தனைகளைச் சீர்குலைத்து ஆளுமையைச் சின்னாபின்னமாக்குகின்றன.

நாம் வாழுகின்ற தமிழகத்தில் இன்றைக்கு இளையோர் உலகம் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. அரசியல் தலைவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாந்து உயிரைப் போக்குகின்ற இளையோர்கள் இன்னும் உள்ளனர். சினிமா நடிகர்களின் மோகத்தால் வாழ்வையே இழக்கும் இளையோர்களும் உண்டு. நடிகைகளுக்கு கோயில் கட்டி கும்பிடும் நிகழ்ச்சியும் வரலாற்றில் உண்டு.

என்னிடம் பத்து இளையோர்களைத் தாருங்கள், நான் இந்த இந்தியாவையே

மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்ன விவேகானந்தர் கூற்று நனவாகுமா? இந்த நவீன உலகத்திலே, இளையோர்கள் பயனற்றவர்கள் என கூறுவதைவிட இவர்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. இன்றைய இளைய சமுதாயத்தைக் குறித்து எந்த அளவுக்குப் பெற்றோர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். நமது மறைந்த திருத்தந்தை 2-ஆம் ஜான் பால் இளையோர் மாநாட்டில், "எனது இனிய இளைய நண்பர்களே! உங்களுக்கு நான் விடுக்கும் செய்தி ஒன்றுண்டு, அதனை உங்கள் உற்றார் உறவினர்களோடும், குடும்ப கோத்திரங்களோடும், உங்களுக்குச் செவிசாய்ப்பவர்களோடும் பகிர்ந்து கொள்ளுங்கள். அச்செய்தி, நான் உங்கள் மேல் அயராது நம்பிக்கை கொண்டுள்ளேன். இளையோராகிய நீங்கள் என் வலிமை, உங்களோடு தான் எனது எதிர்காலக் கனவுகளையும் உற்சாகத்தையும் பகிர்ந்துகொள்ள ஆசையாய் இருக்கிறேன்" என்று உரையாற்றினார். எனவே இன்றைய இளையோர்கள் தங்கள்மேல் முதலில் நம்பிக்கையை வைக்க வேண்டும். துள்ளும் இளமையும், துறுதுறுப்பு இயல்பும் கொண்டவர்களாக இளைஞர்கள் இருக்க வேண்டும். இன்றைய இளைய சமுதாயத்திடம் அனைத்து வகையான "மை" அதாவது இளமை, திறமை, பொறுமை, எளிமை, பேராண்மை, இறமை இருக்க வேண்டும் என்கிறார் சுகி சிவம். இப்படிப்பட்ட குணங்கள் இருந்துவிட்டால் இன்றைய இளைய சமுதாயம் எதிர்காலத்தில் வெற்றியை எளிதாகப் பெறமுடியும். கனவிலே வாழ்ந்து தங்களின் வாழ்வைப் பாழாக்கி கொள்ளும் இளையோர்களுக்காக செபிப்போம். அவர்களுக்கு விழிப்புணர்வு கொடுத்து, அவர்களை ஆற்றுப்படுத்தும் அரும்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவரோடும் நாமும் தோள்கொடுப்போம்.

எதிர்கால தலைமுறைகளான இவர்களை பாங்குடனே பக்குவப்படுத்துவோம். நாமும் புனித ஜான் போஸ்கோவைப் போல துணிந்து இயேசுவின் மதிப்பீடுகளை விதைப்போம், இறையரசின் சீடர்களாவோம்.

## பொங்கித் தருவது பொங்கலாயிருக்கட்டும்!

நல்லாசிரியர் **கவிஞர் எல். பிரைட்,** தேவகோட்டை

வீட்டைக் கழுவி
வெள்ளையடித்தவர்களே
உங்கள்
உள்ளங்களையும் கழுவி
வெள்ளையடித்தீர்களா?
போகிப் பண்டிகை
அதற்கும் சேர்த்துத்தான்!
அடியில் வாழும் போது
இனிக்கத்தானே செய்தீர்கள்
உச்சிக்குப் போனதும் ஏன்
உவர்த்துப் போனீர்கள்
செங்கரும்பைப் போல!
தனித்தனியாக இருக்கும் வரை
அரிசி, பருப்பு,
தண்ணீர், வெல்லம் தான்
ஒன்றோடொன்று
சேர்ந்தால் தானே
சுவையான பொங்கல்?
கொம்பு சீவி விடும்
கொள்கையையெல்லாம்
மஞ்சுவிரட்டு
மைதானத்தோடு
நிறுத்திக்கொள்ளுங்கள்
நண்பர்களிடம்
வேண்டாம்!
நெஞ்சில் யாரும்
நெருப்பை வைத்தாலும்
பொங்கித்தருவது
பொங்கலாயிருக்கட்டும்
பானைகளைப்போல!

**நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும்**
**பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும்.** நீமொ 13:6

# மனிதர்களின் பிழைப்பு எப்படி இருக்க வேண்டும்

✍ ஹேமலதா பாண்டியன்

**தற்போதைய சூழல்**

நீங்கள் பிழைப்பதற்காக வாழ்வாதாரத்தை இழந்து கொண்டிருக்கிறீர்கள். பிழைப்பு வேறு, வாழ்வாதாரம் வேறு. அன்றைய தமிழர்களின் பிழைப்பு வாழ்வாதாரத்திற்கு பிணைந்திருந்தது. அதனால்தான் தமிழர்கள் இரண்டிலும் வெற்றி பெற்று இருந்தன.

**வாழ்வாதாரம் என்பது என்ன?**

இயற்கை தான் நமது வாழ்வாதாரம். இயற்கையை நிந்தித்தால் உயிர்கள் ஓட்டம் இருக்காது. இயற்கையை வளர்க்க வேண்டுமென்றால் இயற்கையின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பிழைப்புகள் நடத்த வேண்டும். இயற்கை ஓட்டத்தில் உள்ள இயற்கை அறிவியலைப் பற்றி புரிந்து இருக்க வேண்டும்.

**இயற்கை அறிவியல் என்றால் என்ன?**

இரவுக்கும் தூக்கத்திற்கும், உடலின் ஓட்டத்திற்கும் பல இயற்கை அறிவியல் உண்டு. இரவு நேரங்களில் நாம் தூங்கும்போதுதான் தூக்கத்தில் வேலை செய்யும் உறுப்புகள் இயங்குகிறது. அதற்காகத் தான் இறைவன் இரவைப் படைத்தார்.

இரவு நேரங்களில் கண்களுக்கு வெளிச்சம் தரக்கூடாது என்பதற்கு தான் இறைவன் சூரியனையே மறைத்தார். இரவைப் படைத்தார். இதுதான் இறைவன் படைத்த அழகான இயற்கை அறிவியல்.

**வேலைநேரம்**

இயற்கை அறிவியலுக்கும் நாம் மேற்கொள்ளும் பிழைப்பின் வேலைக்கும் பல பிணைப்புகள் உண்டு. இன்றும் ஒருசில கிராமங்களில் பணி செய்யும் நேரத்தைப் பார்க்க முடியும். காலை 7.00 மணிமுதல் 2.00 அல்லது 3.00 மணிவரை மட்டும்தான் விவசாயம் செய்வார்கள். இதுதான் சரியான வேலை நேரம். அதன்பிறகு மற்ற வேலைகளில் ஈடுபடுவார்கள். இங்கு இயற்கை இரவு அறிவியல் பண்பும் பாதுகாக்கப்படுகிறது. எப்படி என்றால் நம் இயற்கை தொடு சிகிச்சையில் உடல் உறுப்புகளின் செயல்நேரத்தைப் பற்றிக் கேட்டிருப்போம், உடல் உறுப்புகளின் செயல்தன்மை ஒவ்வொரு மணிநேரங்களிலும் அதற்குரிய உறுப்புகள் வேலை பார்க்கும் அந்த நேரத்தில் விழித்திருந்தால் அதனுடைய செயல் பாதிக்கப்படும். அதனால்தான் உடல்நிலை பாதிப்பு ஏற்படும். இவற்றைக் கணக்கில் கொண்டு நம்முடைய வேலைநேரத்தை உடலின் செயலுக்கு ஏற்ப அமைக்க வேண்டும்.

கிராமங்களில் சென்று பார்த்தால் வாழ்வாதாரத்துடன் இயற்கையும் காப்பாற்றப்பட்டது. பிழைப்பும் நடந்தது, ஜல்லிக்கட்டு மாடுகள் வளர்ப்பு காளை மாடுகள் அழியாமல் காக்கப்பட்டது. அதுவும் வாழ்வாதாரத்தோடு இணைந்த பிழைப்பு. இன்னும் எண்ணற்றவை.

**இயற்கை விவசாயம்**

இயற்கை முறையில் செய்யப்படும் விவசாயம் மட்டுமே வாழ்வாதாரத்தில் பிணைக்கப்பட்டது.

**சுயசார்பு வாழ்க்கை**

நம் மண்ணின் பொருளாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற மிக முக்கியமானது சுயசார்பு வாழ்க்கை. அன்றைய மன்னர்கள் சுயசார்பு வாழ்க்கை முறையில்தான் அதிக கவனம் வைத்திருந்தனர்.

இயற்கை விவசாயத்தின் மூலம் விளைவித்த எள் எண்ணெய் உற்பத்திக்கு பயன்படும். இதன் மூலம் இயற்கை உழவர்களும் வாழ்ந்தனர். வணிகர்களும் எண்ணெய் உற்பத்தி தொழிலை மேற்கொண்டு பிழைப்பு நடத்தினர். மேற்கொண்ட செயலின் மூலம் உள்ளூர் பொருளாதாரம் மேம்பட்டது, வாழ்வாதாரம், இயற்கையின் வளர்ச்சி, உயிர்களின் வளர்ச்சி, மனிதர்களின் பிழைப்பும் நன்றாக இருந்தது.

இன்றைய பிழைப்புகள் அயல்நாட்டை அண்டி உள்ளது. அதனால்தான் நம்முடைய

சுயசார்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நம்முடைய பிழைப்பு மாத வருமானம் அடிமைக்கு மாறியது.

நம் தமிழருடைய மரபு பயன்
ஆங்கிலேயர்களுடைய குறிக்கோள் லாபம்

அயல்நாட்டவர் என்றுமே லாபக் கணக்கில் மட்டும்தான் பிழைப்பு நடத்துவார்கள். வாழ்வாதாரத்தையும் இயற்கையின் பயனை வைத்து அவர்கள் பிழைப்புகள் நடத்தியதில்லை. ஆங்கிலேயர்கள் நமக்குத் தந்ததுதான் நவீன வேளாண்மை. அவற்றில் இயற்கையை பாதிக்கும் அமைப்புகளே அதிகம். அவர்களுடைய படைப்பும் பிழைப்பும் இயற்கையை நிந்தித்ததாகவே உள்ளது. அதனால்தான் எண்ணற்ற நோய்கள் உயிர்களின் அழிவுகள் ஆங்கிலேயரின் வழியில் 70 ஆண்டுகளாக நடக்கின்றோம். அதனால்தான் நோய்களும் உயிர்களின் அழிவுகளும். அவர்கள் வழியில் ஏற்படுத்திய தொழிற்சாலைகள் சுற்றுச்சூழலை கெடுத்ததன் மூலம் நம்முடைய வாழ்வாதாரமான இயற்கையும் அதனோடு தொடர்புடைய உயிர்களும் அழிந்தது.

தற்போது பிழைப்பு நடக்கிறது, கோடி கணக்கில் சம்பாதிக்கின்றோம். ஆனால் நோயோடு வாழ்வாதாரத்தை அழித்து வாழ்கின்றோம். இதன் பயன் என்ன? லாபம் இருக்கு. பயன் எங்கே? இதனை கருத்தில்கொண்டு தான் அன்றைய தமிழர்கள் தங்கள் பிழைப்புகளை வாழ்வாதாரத்தோடு ஒன்றி இருந்தன.

**தமிழர்களின் பிழைப்பும் படைப்பும்**

புலவர்கள் இயற்கையை வளர்க்க பல படைப்புகளைப் படைத்தனர். பல சித்தர் நூல்கள் அதற்கான சான்றுகள். இன்று பொழுது போக்கிற்காக மட்டுமே படைப்புகள் படைக்கின்றன. அதுவும் அர்த்தமற்ற சீரழிக்கும் பொழுதுபோக்கு படைப்புகள். ( எகா : திரையரங்குகள்)

**இயற்கையை வளர்க்கும் பறவைகள்**

இயற்கை ஆர்வலர் சதாசிவசம் ஐயா பறவைகள் பசுமையை உருவாக்குகின்றன என்று சொல்கிறார். காக்கை தனது எச்சத்தில் மட்டுமே 30,000 மரங்களை வளர்க்கின்ற காக்கை சிறந்த பசுமை காவலன் என்கிறார்.

அதேபோல் இருவாச்சி பறவை தன்னுடைய எச்சத்தின் மூலம் மலைகளை பசுமையாக்குகிறது என்கிறார். இருவாச்சி பறவை தன்னுடைய எச்சத்தில் பல மரங்கள் வளர்த்து இயற்கையின் பசுமையையும் சுழற்சியையும் பாதுகாக்கின்றது.

ஆனால் மனிதர்கள் மட்டும் தன்னுடைய இயற்கைத் தடத்தில் இருந்து வழிமாறி இயற்கையை அழிக்கின்றனர். மனிதன் பிழைப்பு என்ற பெயரில் விட்டுச் செல்லும் ரசாயன கழிவுகளின் மூலமே பல இயற்கை சேதம் நடக்கின்றது. இயற்கை சுழற்சியும் துண்டிக்கப்படுகிறது.

**மனிதன் எங்கு தவறு செய்கின்றான்**

இயற்கையின் வளர்ச்சிக்கு உதவாத கருவிகளையும் பொருள்களையும் பயன்படுத்துவதில்தான் மனிதன் தவறு செய்கின்றான்.

கருவிகளை உபயோகிக்கும் முறை, கருவிகளை வைத்து மட்டுமே தற்போதைய பிழைப்புகள் உள்ளது. கருவிகள் இயற்கையையும் உயிர்களையும் வளர்க்காது. இயற்கையை வளர்க்காத எதுவும் வாழ்வாதாரத்திற்கு உகந்தது அல்ல.

"உயிர்களே அழிந்தபின் உங்கள்
நவீன கருவியின் வளர்ச்சியின்
நோக்கமும் பயனும் தான் என்ன?
உயிர்களின் வளர்ச்சிக்கு தான்
படைப்புகள் தேவை
கருவியின் வளர்ச்சிக்கு அல்ல"

என்றும் நினைவில் கொள்ளுங்கள். இயற்கையின் வளர்ச்சியிலும் உயிர்களின் வளர்ச்சியிலும் தான் பூமி இயங்குகிறது. கருவியின் வளர்ச்சியில் இல்லை. இயற்கைக்கு உகந்ததான பிழைப்புகளை மேற்கொள்ளுங்கள்.

# கழுகு மரம்

அருள்சகோதரி. Dr. லடிஸ்கா ரோஸ்லின்,
முத்துப்பட்டி



கழுகு மரம் 500 முதல் 3000 அடி உயரமுள்ள இடங்களில் செழிப்பாக வளரக்கூடியது. ஒரு அடி அகலத்தில் 100 அடி உயரம் வரை வளரும் அழகிய மரம். இதன் இலைகள் தென்னை இலைபோல் சற்று பிளவுகளுடன் காணப்படும். காயில் துவர்ப்புச் சுவையுடைய டானின் என்ற மூலப்பொருள் அதிகமாக உள்ளது. இதன் இளங்குருத்து, விதை, வேர் முதலியவை மருத்துவ குணங்கள் நிறைந்தவை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் பல்வேறு வீட்டு உபயோகப் பொருட்களாகவும் பயன்படுகிறது.

**தாவரவியல் பெயர் :** Areca catechu

**வேறுபெயர்**

பாக்கு மரம், கந்தி அடைக்காய்

**செய்கை**

துவர்ப்பி – Astringent

வெப்பமுண்டாக்கி – Stimulant

**மருத்துவப்பயன்கள்**

**இலை**

- ❖ இளங்குருத்து இலையை நல்லெண்ணெயில் காய்ச்சி இடுப்பில் தடவி வர வலி நீங்கும்

**வேர்**

- ❖ வேரினை நீரிலிட்டு கொதிக்க வைத்தோ அல்லது பொடியாக்கியோ வாய்க்கொப்பளிக்க பல்லசைவு, வாய்ப்புண், உதடு வெடிப்புகள் குணமாகும்.
- ❖ பொடியை வாயிலிட்டு பல்துலக்கலாம்.

**பாக்கு**

கழுகு மரத்தை பாக்கு மரம் என்றும், இதன் காயை பாக்கு என்றும் அழைப்பதுண்டு.

- ❖ இளம்பிஞ்சு பாக்கு வயிற்றுநோய்களுக்குச் சிறந்தது.

"கந்தியின் காய்தினக் கயத்தினை யறுத்திடும்"

- ❖ பச்சைப்பாக்கு தொண்டையில் கட்டும் கோழையைப் போக்கும்.
- ❖ பாக்கை உலர்த்திப் பொடியாக்கி, அதில் 12-25 கிராம் எடை எடுத்து சம அளவு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட செரியாக் கழிச்சல், சிறுநீர் நோய்கள் முதலியன தீரும்.
- ❖ பாக்குத் தூளை 2 கிராம் எடுத்து 20 மி.லி. எலுமிச்சை பழச்சாறு விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுக்க புழுக்கள் வெளியாகும்.
- ❖ 17-25 கிராம் பொடியை 65 மில்லி ஆவின் பாலில் (பசும்பால்) கலக்கிக் கொடுக்க வைத்து காலையில் அருந்த மலத்தை இளகச்செய்யும்.
- ❖ பாக்கை நீரிலிட்டு கொதிக்க வைத்து வாய்க்கொப்பளித்துவர பல்லீறில் உண்டாகும் நோய்கள் தீரும்.
- ❖ பூவரசம் பூ மற்றும் கொட்டைப்பாக்கு இரண்டையும் சம அளவு எடுத்துப் பொடியாக்கி, அதில் 1/2 ஸ்பூன் எடுத்து காய்ச்சாத பாலில் கலந்து தேமல் உள்ள இடங்களில் தடவ தேமல் குணமாகும்.
- ❖ காலை வெறும் வயிற்றில் கொட்டைப்பாக்கு பொடியை 1 சிட்டிகை எடுத்து தேனில் கலந்து உண்ண உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பு குறையும். இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்படாமல் காக்கும்.
- ❖ கொட்டைப்பாக்கை சுட்டு சாம்பலாக்கி அதனுடன் சமஅளவு காசுக்கட்டியும், இலவங்கமும் பொடிசெய்து கலந்து பல் துலக்கி வர ஈறுகள் பலப்படும். பல்லாட்டம், ஈறுகளில் இரத்தம் வடிதல் நிற்கும்.

**களிப்பாக்கு**

- ❖ பாக்கின் தோல் நீக்கப்பட்டு அவித்து அல்லது உலர வைத்து இருக்கும். உலர்த்தப்பட்ட பிறகு கருப்பு நிறத்தில் இருக்கும்.

அதனால்தான் களி (கருப்பு) பாக்கு என்பர்.

❖ நெஞ்சில் கோழை சேரும் – பேதியாகும் – ஆனால் பித்தம், சுவையின்மை நீங்கும்.

**கொட்டைப்பாக்கு**

தோல் சீவப்பட்டு முழுமையாக இருக்கும் பாக்கு கோழை, மலக்கட்டு, கிருமி நீங்கும்.

**சீவல்பாக்கு**

முழுப்பாக்கினை மிகவும் மெல்லியதாக சீவப்பட்ட பாக்கு.

**பொடிப்பாக்கு**

பாக்கினை பொடிசெய்து பயன்படுத்தப்படும் பாக்கு.

**தாம்பூலம் தரிக்கும் விதி**

வெற்றிலை தின்பவர்களுக்கு பாக்கு இன்றியமையாதது.

வழக்கமாக கொட்டைப்பாக்கு, களிப்பாக்கு பயன்படுத்துபவர்கள் பாக்கை வாயிலிட்டு ஊறவைத்த பின், காம்பு, நரம்பு, நுனி இவைகளை நீக்கின வெற்றிலையின் பின் சுண்ணாம்பைத் தடவி வாயிலிட்டு சுவைப்பர். இவ்வாறு பாக்கை முதலில் சுவைத்தால் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. பாக்கு துவர்ப்புச் சுவையாக இருப்பதால் நுண்ணிய துவாரங்களைச் சுருக்கி, எச்சில் ஊறாமல வறட்சியை உண்டாக்கும். நெஞ்சில் அடைப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும். எனவே வெறும் வெற்றிலையை மென்று, பிறகு பாக்கையும் சுண்ணாம்பையும் தடவிய வெற்றிலையை உபயோகிக்க வேண்டும்.

"வெற்றிலைக்கு முன்னும் வெறும்பாக்கை வாயிலிட்டாற் குற்ற முறுமுறவோர். கூட்டம்போம் – வெற்றிலையை முன்னிட்டு பாக்கருந்து முதறிவோர் தம்மார்பின் மன்னிட்டு வாழும்பூ மாது..."

**பயன்கள்**

❖ தாம்பூலத்தை மெல்லும்போது மூன்றாவது, நான்காவதாக ஊறும் நீரே சிறந்த நீர். இதனை துப்பாமல் விழுங்க வேண்டும்.

❖ அதிகாலையில் தாம்பூலம் தரிப்பவர்கள் பாக்கை அதிகமாக உபயோகிக்கலாம். இதனால் மலச்சிக்கல் நீங்கும்.

❖ உணவுக்குப் பின் தாம்பூலம் தரிப்பது செரிமான சக்தியை அதிகரித்து அஜீரணம் மற்றும் வயிறு வீக்கத்தைக் குறைக்கும்.

❖ தாம்பூலம் வாய் துர்நாற்றத்தைப் போக்கி வாயைச் சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது.

❖ சுண்ணாம்புடன் பாக்கும் சேர்த்து சாப்பிடும்போது உடலுக்கு இற்கையான கால்சியம் சத்துக் கிடைக்கிறது.

**தீமைகள்**

❖ பற்களில் கறைகள், ஈறுகளில் வீக்கம், சொத்தை மற்றும் துர்நாற்றம் ஏற்படலாம்.

❖ நீண்டகாலப் பயன்பாடு வாய்ப்புற்றுநோய்க்கான அபாயத்தை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

❖ வயிற்று எரிச்சல், புண், குமட்டல் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்.

**நிறைவாக...**

விருந்தினர்களை உபசரிக்கும்போதும் சடங்குகளிலும் வெற்றிலையுடன் பாக்கினை சேர்த்துப் பயன்படுத்துவது தமிழர்களின் பாரம்பரியம். இதனைத் தாம்பூலம் தரித்தல் என்கின்றோம்.

**"அளவோடு எடுத்துக்கொண்டால் எல்லாம் நலமே"**

## திருமண முன்தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்

### ஜனவரி - 2026

| எண் | தேதி | கிழமை | இடம் |
|---|---|---|---|
| 1. | 10.01.2026, 11.01.2026 | சனி, ஞாயிறு | புனித குழந்தை தெரசாள் ஆலயம், செஞ்சை |
| 2. | 24.01.2026, 25.01.2026 | சனி, ஞாயிறு | புனித அருளானந்தர் ஆலயம், காளையார்கோவில் |

அருள்பணி. **ஸ்டீபன்,** செயலர், குடும்ப நலவாழ்வுப் பணியகம்

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

**புனித வின்சென்ட் தே பவுல் கிளைச்சபை சார்பாக கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பிறப்பை முன்னிட்டு ஏழை மக்கள், ஏழை மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது**

21.12.2025, தேவகோட்டை, புனித சகாய அன்னை கிளைச்சபை சார்பாக ஏழை மக்களுக்கு புதுஉடை வழங்குதல், ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, மத நல்லிணக்க விழா என்று முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. 200 ஏழை மக்களுக்கு புது உடைகள், 100 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. சமய நல்லிணக்க விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் தேவகோட்டை வட்டார அதிபரும், பங்குத்தந்தையுமான அருட்பணி. அருள் சந்தியாகு அவர்கள், பரமக்குடி SMSSS இயக்குநர் அருட்பணி. சேசுராஜ் அவர்கள், இராம்நகர் பங்குத்தந்தை அருட்பணி. வின்சென்ட் அமல்ராஜ் அவர்கள், மத்திய சபை தலைவர் சகோ. பெர்னாட்ஷா, செயலர் சகோ. அலெக்ஸாண்டர், சிறப்பு விருந்தினராக உயர்திரு. PR. செந்தில்நாதன் MLA, சிவகங்கை, உயர்திரு. K. சுந்தரலிங்கம், நகர் மன்றத்தலைவர், வட்டார சபைத் தலைவர் சகோ. சேவியர் இஞ்ஞாசிமுத்து, கிளைச்சபை தலைவர் சகோ. ராஜா, பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு ரூ. 2,25,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

---

21.12.2025, கீழஉச்சாணி கிளைச்சபை சார்பாக, 80 ஏழைகளுக்கு புத்தாடைகள், 10 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை ரூ. 1000/- வீதம் மொத்தம் 10,000, ஒரு நபருக்கு மருத்துவ உதவியாக ரூ. 1,000/- வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்குத்தந்தை அருட்பணி. சேசுராஜ் கிறிஸ்டி, மத்திய சபைத்தலைவர் சகோ. பெர்னாட்ஷா, திட்ட அலுவலர் சகோ. சூசைராஜ், வட்டார சபை தலைவர் சகோ. அருள் மற்றும் கிளைச்சபை தலைவர் சகோ. மரியகண்ணு, பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு ரூ. 50,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார்கள்.

| வ. எண் | உதவி வழங்கிய தேதி | கிளைச்சபை | உதவி வழங்கியது மற்றும் பங்கு கொண்டவர்கள் |
|---|---|---|---|
| 1. | 21.12.2025 | வேற்காடு புனித சூசையப்பர் கிளைச்சபை | 40 ஏழைக்குடும்பங்களுக்கு அரிசி மற்றும் கேக் வழங்கப்பட்டது. |
| 2. | 21.12.2025 | சருகணி திரு இருதயங்களின் கிளைச்சபை | 190 ஏழை பயனாளிகளுக்கு புத்தாடைகளும் இனிப்பும் வழங்கப்பட்டது. |
| 3. | 21.12.2025 | பரமக்குடி, புனித அலங்கார மாதா கிளைச்சபை | 150 ஏழைக்குடும்பங்கள், துப்புறவு பணியாளர்கள், தத்துக்குடும்பங்கள் அனைவருக்கும் புத்தாடை இனிப்பு, மதிய உணவு வழங்கப்பட்டது. |
| 4. | 21.12.2025 | சூசையப்பர்பட்டணம், புனித சூசையப்பர் கிளைச்சபை | 40 ஏழைக்குடும்பங்களுக்கு புத்தாடைகளும் இனிப்பும் வழங்கப்பட்டது. |
| 5. | 21.12.2025 | ஆவுடைப்பொய்கை, அந்தோணியார் கிளைச்சபை | மாணவியின் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை ரூ. 5,000/- வழங்கப்பட்டது. |
| 6. | 21.12.2025 | கூத்தலூர், அமல அன்னை கிளைச்சபை | 13 ஏழை மாணவர்களுக்கும், 14 ஏழை மக்களுக்கும் ரூ. 17,500/- மதிப்புள்ள புத்தாடைகளும், இனிப்பும் வழங்கப்பட்டது. |
| 7. | 20.12.2025 | T. சூசையப்பர்பட்டினம் வளனார் கிளைச்சபை | 39 ஏழைக்குடும்பங்களுக்கு புத்தாடைகள், அரிசி, இனிப்பு மற்றும் ரூ. 200/- ரொக்கமாக வழங்கப்பட்டது. |
| 8. | 20.12.2025 | தொண்டி கிளைச்சபை | 20 ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்களும், இனிப்பும் வழங்கப்பட்டது. |

| வ. எண் | உதவி வழங்கிய தேதி | கிளைச்சபை | உதவி வழங்கியது மற்றும் பங்கு கொண்டவர்கள் |
|---|---|---|---|
| 9. | 19.12.2025 | தேவகோட்டை ஆனந்தா கல்லூரி இளைஞர் கிளைச்சபை | கிறிஸ்துமஸ் பிறப்பு விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி செயலர் தந்தை அருட்பணி. செபாஸ்டியன், மத்திய சபைத் தலைவர் சகோ. பெர்னாட்ஷா, செயலர் சகோ. அலெக்ஸாண்டர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். |
| 10. | 14.12.2025 | தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கிளைச்சபை | 35 ஏழைக் குடும்பங்களுக்கு புத்தாடை, இனிப்பு வழங்கப்பட்டது. சிறப்பு அழைப்பாளராக காவல்துறை ஆய்வாளர் சகோ. மகேஷ்குமார் கலந்துகொண்டு உதவிகள் வழங்கினார். |
| 11. | 14.12.2025 | குண்டுகுளம், திருஇருதய ஆண்டவர் கிளைச்சபை | கல்வி உதவித்தொகை ரூ. 5,000/- வழங்கப்பட்டது. |
| 12. | 07.12.2025 | கொம்படிமதுரை, புனித சவேரியார் கிளைச்சபை | கல்வி உதவித்தொகை ரூ. 5,000/- வழங்கப்பட்டது. |
| 13. | 30.11.2025 | இளையான்குடி கிளைச்சபை | வீடு பராமரிப்பு நிதியாக ரூ. 9,000/- பங்குத்தந்தை அருட்பணி. அமலன் அவர்களும், வட்டார சபைத் தலைவர் சகோ. இருதயசாமி மற்றும் கிளைச்சபைத் தலைவர் முன்னிலையில் வழங்கப்பட்டது. |

# வியர்வைக்கு வாழ்த்து!

நல்லாசிரியர் **கவிஞர் எல். பிரைட்,** தேவகோட்டை

மேனியில் ஊறிய உப்புத்தண்ணி – தினம்
பூமியில் பாய்ச்சினான் ஏர்உழவன்
ஆகையால் தானே இப்பொங்கலுக்கு – இன்று
ஆளாகி வந்தது பச்சரிசி!

காலையும் மாலையும் சோம்பிடாமல் – தினம்
காளையும் ஓட்டின ஏர்கலப்பை
ஆகையால்தானே இப்பொங்கலுக்கு – இன்று
ஆவலாய் வந்தது செங்கரும்பு!

ஆலையின் சங்கொலி கேட்டதுமே – தினம்
வேலைக்கு ஓடினர் ஏழைச்சனம்
ஆகையால்தானே இப்பொங்கலுக்கு – இன்று
அச்சாகி வந்தது வெல்லக்கட்டி!

நீரையும் மண்ணையும் சேர்த்தெடுத்து – அதை
நீவி நீவிச் செய்தான் கைவினைஞன்
ஆகையால் தானே இப்பொங்கலுக்கு – இன்று
அம்சமாய் வந்தது பொங்கல் பானை!

பூமியில் மக்களை வாழவைக்க – தினம்
வாழ்வைத் தொலைத்தவர் ஆயிரம்பேர்
வாழவைத்தவரை வாழ்த்திடவே – இன்று
வந்தது வந்தது பொங்கல் விழா!

